பொதுசனநூலகம்
11 OCT 2017
நகரசபை

# AHARAM
# அகரம்

எண்: 11 எழுத்து: 10 ஒக்டோபர் - 2017 | முஹர்ரம் 1439

## உலக சிறுவர் தினம் ஒக்டோபர் 01



# சிறுவர்களின் புன்னகை உலகிற்கு பொன்னகை

50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹிஜ்ரி 1439

# முஹர்ரம்:


## இஸ்லாமிய புதுவருடம்

- வாழ்விற்கு வழிகாட்ட வந்த இஸ்லாம் எமக்காக ஒரு புதுவருடத்தையும் அன்பளிப்பாக தந்துள்ளது.

  மக்காவிலிருந்து மதீனா நகரை நோக்கி இஸ்லாத்தை வேரூன்றச் செய்வதற்காக மேற்கொண்ட ஹிஜ்ரத் பயணத்தை மையமாகக் கொண்டே இஸ்லாமிய நாட்காட்டி உருவாக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய வருடக் கணக்கில் முதல் மாதம் முஹர்ரமாகும். எனினும், ஹிஜ்ரத் சம்பவம் 'ரபீஉல் அவ்வல்' மாதமே நடைபெற்றது.
- வானம் பூமி படைக்கப்பட்ட காலம் முதல் அல்லாஹ் மாதங்களின் எண்ணிக்கையை பன்னிரெண்டாக ஆக்கியுள்ளான். அதில் நான்கு மாதங்கள் கண்ணியத்திற்குரியவை. (சூரா தவ்பா : 36) அம்மாதங்கள் (முஹர்ரம், ரஜப், துல்-கஃதா, துல்-ஹஜ்) ஆகும்.
- யுத்தங்கள், போராட்டங்கள், கொலைகள் அற்ற புனித மாதங்களில் முஹர்ரமும் ஒன்றாகும். ஜாஹிலிய்யா கால மக்கள் கூட இம்மாதங்களை கௌரவப்படுத்தி யுத்த நிறுத்தங்களை மேற்கொண்டார்கள்.
- இஸ்லாமிய ஹிஜ்ரி ஆண்டை முதன் முதலில் கணக்கிடச் செய்தவர் நீதியின் தந்தை என புகழப்படும் இரண்டாம் கலீபா உமர் (ரழியல்லாஹு அன்ஹு) ஆவார். இது ஹிஜ்ரி 16 இல் நடைபெற்றது.
- இஸ்லாமிய வருடக் கணக்கில் சந்திரனை அடிப்படையாகக் கொண்ட முதல் மாதம் முஹர்ரம் ஆகும்.
- ரமழான் மாத நோன்பிற்குப் பின்னால் நோற்கப்படும் சிறப்பான நோன்பு அல்லாஹ்வின் மாதம் என அழைக்கப்படும் முஹர்ரம் மாதத்தில் பிடிக்கப்படும் நோன்பாகும் என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறினார்கள்.
- முஹர்ரம் மாத ஒன்பதாம் தினத்திற்கு அரபியில் 'தாஸூஆ' என்றும் பத்தாம் தினத்திற்கு 'ஆஷூரா' என்றும் அழைக்கப்படும்.

  இஸ்லாம் அறிவியலின் மார்க்கம். அதனால் புதுவருடம் வெறும் கொண்டாட்டங் களுடன் சுருங்கிக் கொள்வதை அது விரும்பவில்லை. கடந்த காலத்தை மதிப்பீடு செய்து எதிர்காலத்தை அழகாக திட்டமிட இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




06

எமது சூழலில் உள்ள
சிறிய விலங்குகளின்
துரித வளர்ச்சியைக்
கட்டுப்பாட்டுக்குள்
வைத்திருப்பது நரிகள்தான்.




22



26



32



38



AHARAM
அகரம்

எண்: 11 - ஒக்டோபர் : 2017 - எழுத்து: 10






ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர் M.Ed

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

துணை ஆசிரியர்
வ. முஹம்மத் நபீல்

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்


## பாடத்திட்டம்


| | |
|---|---|
| தகவல் தொடர்பாடல் | 30 |
| வரலாறு | 34 |
| அரபு மொழி | 14 |




36



**தொடர்புகளுக்கு:**

**அகரம்**
**77. ஸ்ரீ வஜிரஞான மாவத்தை**
**கொழும்பு 00900**
**தொ.பே : 077 741 2561**
**பெக்ஸ் : 011 268 6030**
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com



சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்நாள் வாழ்த்துக்குரியவர்கள்

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தன்னை அறிமுகம் செய்கின்றபோது, ''நிச்சயமாக நான் ஓர் ஆசிரியனாகவே அனுப்பப்பட்டுள்ளேன்'' எனக் குறிப்பிட்டார்கள்.

ஆசிரியப் பணி என்பது மகத்துவமான பணி. இறைத்தூதர்களது பணி எதிர்கால சமூகத்தை சீரிய சிந்தனையின்பால், நெறிய வழியின்பால் வழிநடத்தும் பணி. ஆசிரியன் என்பவன் நன்மைகளின் திறவுகோலாகவும் தீமைகளின் பூட்டாகவும் இருக்கின்றான். மாணவ சமூகத்தின் சிந்தனையிலும் உள்ளத்திலும் நடத்தைகளிலும் ஏற்படுகின்ற அசுத்தங்கள், நோய்கள் என்பவற்றை மிகக் கவனமாக இனங்கண்டு வைத்தியம் செய்யும் ஞானி; ஆன்மிகப் பயிற்றுவிப்பாளன் மொத்தத்தில் ஆசிரியர் என்பவர் அறிவை ஊட்டி, மாசு களைந்து வாழ்க்கையை அறிமுகம் செய்பவர். எதிர்கால உலகை வழிநடத்தும் தலைவர்களை உருவாக்கியவர்.

இப்பணி சொல்வதற்கும் எழுதுவதற்கும் இலகுவானது; ஆனால், சவால் மிக்கது. தூய்மையாக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஆசிரியனால் மாத்திரமே இது சாத்தியமாகும். தனது தூரநோக்கை தெளிவாக அடையாளப்படுத்திக் கொண்ட ஆசிரியன் இதில் வெற்றி பெறுகிறான். அவர்களது உள்ளங்களில் அழியா இடத்தைப் பெற்றுக் கொள்கின்றான். அவர்களது பிரார்த்தனைகளில் தன்னை அருகதையுள்ளவனாக தகைமைப்படுத்திக் கொள்கின்றான்.

ஆசிரியர்களை சமூகம் நம்புகின்றது. அவர்கள் மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளது. அவர்களிடம் எண்ணற்றவற்றை எதிர்பார்க்கின்றது. ஒவ்வொரு தாயும் தந்தையும் தம்மை விட தம் பிள்ளையின் விடயத்தில் ஆசிரியனை நம்புகின்றார்கள். அவனது ஒழுக்கம், பண்பாடு, அறிவு என்பவற்றை ஆசிரியனால் மாத்திரமே வழங்க முடியும் என்று கருதுகின்றார்கள்.

எனவே, இப்பணி அருள்மிக்கது. உலக வாழ்வின் மன நிறைவுக்கும் மறுமை வாழ்வின் ஈடேற்றத்திற்கும் நிச்சயம் பெருந்துணை செய்யும் பணி. அதேவேளை, அமானத் கூறும் பொறுப்பு உலகில் மட்டுமல்ல, மறுமையிலும் விசாரணைக்கு உட்படுத்தப்படும். பொறுப்புக்கு தன் சொல்லாலும் செயலாலும் ஆசிரியன் சான்று பகர கடமைப்பட்டுள்ளான்.

இவ்வாசிரியர்களை மதிப்பதும் கௌரவிப்பதும் சமூகத்தின் கடமை. அது ஒரு நாளின் கடமையல்ல, வாழ்நாள் கடமை. அவர்களது வழிகாட்டல்களை ஏற்பதும் பின்தொடர்வதும் மாணவ சமூகத்தின் கடமை. அவர்களது அன்பிலும் கண்டிப்பிலும் தனது எதிர்காலம் பிரகாசிக்கும் என மாணவர்கள் ஆழமாய் நம்ப வேண்டும். எமது ஒளிமயமான எதிர் காலத்திற்காகவே தன்னலம் பாராது உழைக்கிறார்கள் என ஆசிரியர்களைப் போற்ற வேண்டும்.

வாழ்நாள் கடமையை ஒருநாளில் முடித்து விடாது ஆசிரியப் பணியை கௌரவிப்போம்; மதிப்போம்; போற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அபூ உமாமா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''ஒரு வணக்கசாலியை விட ஓர் அறிஞரின் சிறப்பு, உங்களில் சாதாரண ஒரு தோழரை விட என் சிறப்பு போலாகும் என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிவிட்டு, நிச்சயமாக அல்லாஹ் மக்களுக்கு நல்லதைப் போதிக்கும் ஒருவருக்கு அருள் புரிகின்றான். மேலும், அவருக்காக அவனது வானவர்களும் வானம், பூமியில் உள்ளோரும் கூட்டில் உள்ள எறும்புகளும் நீரில் உள்ள மீன்களும் (அவருக்காக) பிரார்த்தனை செய்கின்றன'' என்றார்கள். (திர்மிதி)

# இறையருள் பெற்ற ஆசிரியர்கள்

கற்றறிந்த நல்ல பல விடயங்களை பிறருக்குச் சொல்லிக் கொடுக்கும் மனிதனுக்கு அல்லாஹ் வழங்குகின்ற மகத்தான கண்ணியம் பற்றி மேலுள்ள ஹதீஸில் சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் அல்லாஹ்வின் அருளோடு நேரடியாக தொடர்புபடுகின்றவர்கள் மாத்திரமல்லாது, வணக்கசாலியை விடவும் அல்லாஹ்விடத்தில் உயர்ந்தவர்கள்.

இஸ்லாம் கல்விக்கு மகத்தான கண்ணியத்தையும் சிறப்பையும் வழங்கியுள்ள மார்க்கம். சிறந்த கல்வியின் மூலம் ஒருவன் மரணத்திற்குப் பின்னரும் நன்மைகளை சேகரித்துக் கொண்டே இருக்கின்றான். இச்சிறப்புமிக்க கல்வியை தேடிச் சென்று கற்பவன், அக்கல்வியை பிறருக்கு போதிக்கின்றவன் ஆகிய இருவரும் அல்லாஹ்விடத்தில் உயர் அந்தஸ்தைப் பெற்றவர்கள்.

நல்ல விடயங்களைக் கற்று அதனைப் பிறருக்கும் கற்றுக் கொடுப்பவர் என நபியவர்களால் இனங்காட்டப்பட்டுள்ளவர், சமகாலத்தில் மாணவர்களுக்கு பயன்மிக்க கல்வியை கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்களையே குறித்துக் காட்டுகின்றது. இவர்கள் ஆசிரியர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், உஸ்தாத்மார், வழிகாட்டிகள் போன்ற பெயர்களைக் கொண்டழைக்கப்படலாம் அல்லது இவற்றுக்கப்பால் ஒரு சாதாரண பெயரைக் கொண்டு அழைக்கப்படலாம்.

இவ்வாசிரியர்களின் சேவைகள் சமூகத்தில் மகத்தான, எப்போதும் நினைவுபடுத்தப்பட வேண்டிய மற்றும் படிப்பினைகளாகக் கொள்ளப்பட வேண்டியவை. ஏனெனில், பல்வேறுபட்ட குணாதிசயங்களைக் கொண்ட மாணவர்களை நெறிப்படுத்தி சமூகத்தில் நற்பிரஜைகளாக மாற்றுவதில் ஆசிரியரின் பங்கு அளப்பரியது.

நற்குணம், தன்னம்பிக்கை, அடிப்படைக் கடமைகள், சமூக சிந்தனை, தலைமைத்துவம் போன்றவற்றைக் கற்பித்து, மாணவர்களிடம் ஒழிந்து கிடக்கின்ற ஆற்றல்களை சர்வதேச மட்டத்தில் வெளிக்கொணர்ந்து அவர்களின் உயர்வுக்கு ஏணியாய் அமைவது அறிவைச் சுமந்த ஆசிரியர்களின் உயர் தன்மையே.

இதனால்தான் அல்லாஹ்வின் இறுதித் தூதர் முஹம்மத் எனும் ஆசிரியரினால் அறிவூட்டப்பட்டு வளர்க்கப்பட்ட மாணவச் செல்வங்களாகிய ஸஹாபாக்கள், அறிவை நேசிப்பவர்களாகவும் அறிவை கற்றுக் கொடுக்கும் அறிஞர்களை, ஆசிரியர்களை கண்ணியப்படுத்துபவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

அலி (ரழியல்லாஹு அன்ஹு) கூறினார்கள்: எனக்கு யார் ஓர் எழுத்தைக் கற்றுத் தருகிறாரோ அவருக்கு நான் அடிமையாக இருப்பேன்.

அந்தவகையில், மாணவர்களாகிய நாம், கல்விக்கும் கற்றுத் தரும் ஆசிரியர்களுக்கும் உரிய கண்ணியத்தை வழங்கத் தவறிவிடக் கூடாது. அவர்களது மனம் நோகும்படி நாம் எமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்வது கூட எமது எதிர்காலத்தில் பாரதூரமான தாக்கத்தைச் செலுத்துகின்ற விடயமாக மாறிவிடும். ஏனெனில், பெற்றோருக்கு அடுத்ததாக எமக்கு தாயாக, தந்தையாக ஆசிரியர்களே செயற்படுகின்றனர்.

ஆகையால்தான், தனக்கும் தனது தாய், தந்தைக்கும் அடுத்ததாக தனது ஆசிரியர்களுக்காக இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும் என்று இஸ்லாம் வழிகாட்டுகின்றது. அவ்வாறெனில், ஆசிரியர் தினத்தில் மாத்திரமல்லாது நாம் எப்போதும் எமது ஆசிரியர்களை நினைவுபடுத்தி அவர்களுக்காக பிரார்த்தனை செய்கின்றவர்களாக, அவர்களுக்கு உரிய கண்ணியத்தை வழங்குகின்றவர்களாக, அவர்களது அன்பையும் பிரார்த்தனையையும் பெற்றுக் கொண்டவர்களாக எமது கல்விப் பயணத்தைத் தொடருவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள்

தொடர் - 06

கிஸஸ் அல்ஹைவான் பில் குர்ஆன் எனப்படும் அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள் என்ற நூலை அகரம் வாசகர்களுக்காக தொடராகத் தர உள்ளோம், இன்ஷா அல்லாஹ்.

அறபியில்: அஹ்மத் பஹ்ஜத் | மலையாளத்திலிருந்து தமிழில்: ஜெ. இஸ்ஹாக்

## ஸாலிஹ் நபியின் ஒட்டகம் -3

ஸாலிஹ் நபி தனது சமூகத்தினரிடம் சொன்னார்: உங்களில் யாராவது ஒட்டகத்தைத் துன்புறுத்தினால் உடனடியாக உங்களை அல்லாஹ்வின் வேதனை வந்தடையும் என்று அல்லாஹ் எச்சரிக்கின்றான்.

நாங்கள் ஒட்டகத்திற்கு எந்தத் துன்புறுத்தலும் செய்ய மாட்டோம் என்று அவர்கள் உறுதி அளித்தனர்.

மக்கள் போய் விட்டார்கள்; ஸாலிஹ் நபியும் போய் விட்டார்; நான் மாத்திரம் தனியே நின்றேன் எனக்கு அந்நியமான உணர்வு தோன்றியது. சற்றுமுன் பாறையாக இருந்த நான் இப்போது ஒட்டகமாக மாறி தெய்வீக முன்னறிவிப்பின் அற்புத சான்றாக இதோ நான் எழுந்து நிற்கின்றேன்! என்னை யாராவது தொட்டால் அவருக்கு இறைவனின் வேதனை! ஒட்டகமும் அல்லாஹ்வின் அற்புதமுமான என்னை யாராவது துன்புறுத்த முற்படுவார்களா? என்னால் இதனை விளங்கிக் கொள்ள முடியவில்லை! என்னை இம்சிக்க யாருக்காவது மனது வருமா? எனக்குப் புரியவில்லை!

அவர்களில் எவர் மீதும் எனக்கு வெறுப்பு உண்டாகவில்லை. மாறாக, எல்லோர் மீதும் நேசம் உண்டாகியது.


நகரத்தின் வீதிகளினூடாக நான் சற்று நடந்தேன்.

அச்சில் வெட்டியெடுத்த கற்களையும் உடைத்தெடுத்த பாறைக் கற்களையும் கொண்டு அவர்கள் தமது வீடுகளைக் கட்டியிருந்தார்கள். நகரத்தின் தாழ்ந்த பகுதிகளில் செல்வந்தர்கள் தமது மாளிகைகளையும் கொட்டாரங்களையும் அமைத்திருந்தார்கள். சிலர் மலைகளைக் குடைந்து தமது வீடுகளை அமைத்திருந்தனர்.

நான் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தேன்.

''பாறையிலிருந்து ஓர் ஒட்டகம்'' என்ற செய்தி எங்கும் பரவி என்னைப் பார்க்க மக்கள் திரண்டு வந்தார்கள். அவர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் தீராத வியப்புடன் என்னை நோக்கினர்! அவர்களின் சிந்தையை ஆக்கிரமித்திருந்தேன் நான்.

எனது அசைவில் ஏதோ ஒரு பயம் அவர்களுக்குத் தோன்றியிருந்தது? நான் எனது தலையை அல்லது வாலை அசைத்தால்போதும், அவர்கள் ஆர்ப்பரித்துக் கொண்டு பின்னோக்கி நகர்வார்கள். நான் ஏதோ அற்புதத்தை நிகழ்த்தப் போவதைப் போல!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலில் இது என்னை சங்கடத்தில் ஆழ்த்தியது. எனது சுதந்திரத்தை அது தடைசெய்தது! நான் அசையாமல் நிற்பேன். அவர்கள் தீவிரமாக என்னை அவதானிப்பார்கள். அவர்கள் தமக்குள் என்னைப் பற்றி குசுகுசுப்பார்கள். ஆயினும், ஒரு வார்த்தை கூட எனக்கு தெளிவாக விளங்கவில்லை!

ஒரு தடவை ஒரு சிறுவன் என்னை நெருங்கி வர துணிவு பெற்றான். எனது கழுத்தை தொட்டான் தொட்ட உடனே கையை பின்னுக்கு இழுத்தான். அவனுக்கு அது விளையாட்டாக இருந்தது.

எனது தலையைத் தடவ அவன் விரும்புவதை நான் உணர்ந்து கொண்டேன். நான் குனிந்து எனது தலையைத் தாழ்த்தினேன். எனது தலையில் தனது விரல்களால் தடவிக் கொடுத்தான்.

அந்த சிறுவனின் செயலால் ஜனங்களுக்கு என்னைப் பற்றிய பயம் சற்று அகன்றிருக்க வேண்டும்; அவர்கள் என்னை நெருங்கி தடவிப் பார்த்தார்கள். நான் உண்மையிலேயே சதையும் உணர்வும் கொண்ட ஒட்டகம்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டதைப் போல அது இருந்தது!

சமூத் மக்கள் என்னுடன் காட்டிய இந்த வாஞ்சையை நான் வரவேற்றேன். அவர்களோடு எனக்கு நேசம் அதிகரித்தது.

சமூத் சமூகத்தினரிடம் வந்த மூன்றாம் நாள் நான் ஓர் அழகான குட்டியை ஈன்றெடுத்தேன். என்னைப் போலவே என் குட்டியும் இருந்தது. ஜனங்கள் என்னை விடவும் அதிகமாக எனது குட்டியிடம் ஈடுபாடு காட்டுவதுபோல எனக்குத் தோன்றியது.

அதனை அவர்கள் தொட்டு தடவினார்கள். உண்மையாகவே ஒட்டகக் குட்டிதான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதுபோல அவர்தம் செய்கை இருந்தது.

குட்டிக்கு நான் பாலூட்டத் தொடங்கினேன். எனது பாலைக் கண்ட ஜனங்களுக்கு அதில் நாவூறியது. அவர்கள் ஸாலிஹ் நபியிடம் சென்று, புதிதாக நான் ஈன்றெடுத்த குட்டியைப் பற்றியும் ஒட்டகப் பாலருந்த வேண்டும் என்ற தமது ஆசையும் வெளிப்படுத்தினர்.

''தங்களது பிரார்த்தனை மூலம் அல்லாஹ் வெளிப்படுத்திய ஒட்டகத்தைப் பிரயோசனப் படுத்துவதற்கு நாங்கள் விரும்புகின்றோம். குட்டி பால் முழுவதையும் குடிப்பதில்லை... பால் சுரந்து வீணாகின்றது... தெய்வீக அருள் அதில் உண்டாகி இருக்கலாம். அதனால், நாமும் அதில் கொஞ்சம் அருந்த விரும்புகின்றோம்''

இறைவன் தனது கருணையினால் ஒட்டகத்தின் பாலை உங்களுக்கு ஹலாலாக்கியிருக்கின்றான். ஆயினும், கிணற்றில் நீரருந்துவதை ஒட்டகத்துக்கும் உங்களுக்கும் இடையில் ஒரு நிபந்தனை உண்டு.

''ஒரு நாள் ஒட்டகம் நீரருந்த நீங்கள் விட்டுக் கொடுங்கள். அன்றைய தினம் நீங்கள் ஒட்டகத்தின் பாலை அருந்திக் கொள்ளுங்கள். நீங்கள் நீர் அருந்தும் நாளையில் ஒட்டகத்தின் குட்டிக்கு பால் அருந்த விட்டுக் கொடுங்கள்''

மக்கள் அவருடைய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டனர்.

நான் பால் சுரக்கும் ஓர் அட்சயப் பாத்திரமாகவே மாறிப் போனேன். வேண்டியளவு பால் சுரக்க அல்லாஹ் அருள்புரிந்தான். எனது குட்டிக்கு போக, சமூத் ஜனங்கள் அத்தனைபேர் அருந்திய பின்னும் மேலும் பால் சுரந்தது! அவர்கள் பாலை பகுத்து நெய், பாற் கட்டி, வெண்ணெய், கிறீம் போன்ற பலவற்றைச் செய்து கொண்டார்கள்.

என்னுடைய பால் மிகவும் சுவையாக இருந்தது! பால் அருந்தினால் அதன் பிறகு பசியோ, தாகமோ வருவதில்லை!

அவர்களோடு நான் நல்ல முறையில் சினேக பூர்வமாக நடந்து கொண்டேன். அனேக தரம் நான் எனது குட்டியைப் பால் மடியிலிருந்து அகற்றிவிட்டு ஊர் பேர் தெரியாத சிறிய குழந்தைகளுக்குப் பால் புகட்டியிருக்கின்றேன்.

நாட்கள் நகர்ந்தன, நான் எல்லோருக்கும் விருப்பத்திற்கு உரியவளாகிப் போனேன். அனைவருக்கும் பால் வழங்கும் அமுத சுரப்பியாக நான் இருந்தேன்.

(இன்ஷா அல்லாஹ் தொடரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் ஆலிப் அலி (இஸ்லாஹி)
BA.(cey), Dip. in psychological Counseling.
www.aliaalif.tk / aalifali@gmail.com

# தந்திரக்கார நரி

"ஓராம் ஓர் ஊரிலே…" என்று ஆரம்பிக்கின்ற அநேகமான சிறுவர் கதைகளில் நரிக்கு கட்டாயம் ஒரு முக்கிய இடமுண்டு. பாட்டி வடை சுட்ட கதையில் வரும் நரியின் தந்திரக் குணத்தை பாலர் பாடசாலையில் கேட்டுப் படித்த ஞாபகம் என்னைப் போலவே உங்களுக்கும் இருக்கும். கவிதைகளிலும் பாடல்களிலும் கூட நரி இடம்பெறுகின்றது. அண்மைக் காலமாக "நரி வருது, நரி வருது காக்கா காக்கா பறந்து வா" என்ற சிறுவர் பாடல் அநேகர் மத்தியிலும் பிரபல்யமடைந்து வருகின்றது. ஒரு காலத்தில் எமது நாட்டிலும் கிராமபுறங்களிள் எல்லாம் நரிகள் பரந்து வாழ்ந்துள்ளன. எமது மூத்த தாத்தா, பாட்டிமாரிடம் கேட்டால் சொல்வார்கள். அந்தளவுக்கு முன்னைய காலங்களில் மிக இலகுவாக நரிகளை எமது கிராமப்புறங்களில் காண முடியுமாக இருந்துள்ளது. ஆனால், இன்று மிருகக் காட்சிசாலையில் மட்டுமே சென்று பார்க்க முடியுமான அளவுக்கு நரிகள் அழிந்து, குறைந்து சென்றுள்ளன. காண அரிதாகிச் சென்றுள்ள நரிகளைப் பற்றியும் அவற்றின் பயன்களைப் பற்றியும் இத்தொடரில் பார்ப்போம்.

**வகை, இனங்கள்**

நரி, நாய் இனத்தைச் சேர்ந்த ஒரு காட்டு விலங்காகும். ஊனுண்ணி, பாலூட்டி விலங்கு வரிசையில் நரி இடம்பெறுகின்றது. உலகில் சுமார் 27 வகையான நரியினங்கள் உள்ளன. அவற்றுள் செந்நரி (Golden Jackal), இந்திய நரி (Indian Jackal) குள்ளநரி (Indian fox), பாலைவனக் குள்ளநரி (Desert Fox), செங்குள்ள நரி (Dhole) வங்க நரி (Bengal fox) பெனெக் நரி (Fennec fox) மற்றும் இமாலய நரி என பல வகை நரியினங்கள் காணப்படுகின்றன.

**உடலமைப்பு**

நாய் இனத்தின் மற்ற வகைகளான நாய், ஓநாய் போன்றவற்றை விட அளவில் சிறியது. அழகிய குள்ளமான உடலமைப்பைக் கொண்டவைதான் நரிகள். நாய்களின் அல்லது ஓநாய்களின் முகச்சாயலை ஒத்திருப்பினும் அவற்றிலிருந்து நுணுக்கமான வித்தியாசத்தை இவை பெற்றிருக்கின்றன. தாடைப் பகுதியை வைத்து இவ்வித்தியாசத்தைக் கண்டு கொள்ளலாம். நீண்ட முகம், கறுப்பு நிற மூக்கு, கபில, கருமைநிறக் கண்கள், ரேடார் போன்று எப்போதும் அங்கும் இங்கும் திரும்பியபடி சப்தங்களை உற்றுக் கேட்டுக் கொண்டிருக்கும் நீண்ட முக்கோண வடிவிலான இரண்டு காதுகள், ஒல்லியான நான்கு கால்கள், அடர்த்தியான பஞ்சு மேனி, அதேபோன்று நீண்ட அடர்த்தியான மயிர்களைக் கொண்ட வால்… என்ற தோற்ற அமைப்பைக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொண்டவைதான் இந்த நரிகள். இவற்றின் வால் அதன் உடல் நீளத்தில் 50 முதல் 60 வரை இருக்கும்.

இன்னும் சில நரிகள் தோல், காது, கால்கள் போன்றவற்றில் அதிக வெள்ளையும் கறுப்பும் கலந்த முடிகளுடன் காணப்படுகின்றன. வேறு சிலவை மஞ்சளும் சிவப்பும் கலந்த சாம்பல் போன்ற மண் நிறத்தில் உள்ளன. நன்கு வளர்ந்த ஒரு நரி சுமார் 9 கி.கி. பாரம் இருக்கும். பெண் நரியை விடவும் ஆண் நரி பெரிதாக இருக்கும். இவை சுமார் 60-75 செ.மீ (2-2.5 அடி) நீளம் இருக்கும், உயரம் 36 செ.மீ. (1 அடி 2 அங்குலம்) இருக்கும். பொதுவாக நடுத்தர நாயின் அளவிலேயே எல்லா வகையான நரிகளும் இருக்கும். ஆனால், பெனெக் (Fennec fox) வகையைச் சேர்ந்த நரி மட்டும் பூனையின் அளவே இருக்கும்.

**வாழிடங்கள்**

நரி இனமானது உலகில் அண்டாடிக்காவைத் தவிர மற்றைய எல்லாப் பிரதேசங்களிலும் வாழும் தகைமையைப் பெற்றுள்ளது. கடுங்குளிரான பனிபடர்ந்த ஆர்ட்டிக் முனைப் பகுதிகள் முதல் ஆப்பிரிக்காவின் சுடுநிலமாகிய சஹாராப் பாலைவனம் வரை ஆசியா, ஆப்பிரிக்கா, தென் ஐரோப்பா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா என அனைத்துப் பகுதிகளிலும் வாழ்கின்றன. நகரங்கள் அல்லது கிராமங்களுக்கு அருகிலுள்ள தாழ்வான அல்லது ஒதுக்குப் புறமான பகுதிகளில் பதுங்கி வாழ்கின்றன. வயல் வெளிகள், அடர்ந்த காடுகள், சமவெளிகள், புதர்காடுகள், மலை மேலுள்ள புல்வெளிகள் என பல வகையான இடங் களில் மறைவாக வாழ்கின்றன. காட்டிலுள்ள குகை களிலும் நிலத்தின் கீழ் அவற்றின் அளவுக்குப் பெரிதான வலைகளை அமைத்தும் வாழ்கின்றன. முன்பெல்லாம் கிராமங்களில் மனிதக் குடியிருப் புகள் காடுகளை அண்டி இருந்ததால் நரிகளைக் காண்பது இலகுவாக இருந்தது. இன்று காடுகள் அழிக்கப்பட்டு ஆங்காங்கே கொங்ரீட் காடுகள் முளைத்து நகரமயமாகியிருப்பதால் பல உயிரினங் களைப்போன்று நரிகளும் காண்பதற்கு அரிதான உயிரின வரிசையில் சேர்ந்திருக்கின்றன.

**வாழ்க்கை அமைப்பு**

நரிகள் கூட்டமாக, குடும்பமாக வாழும் இயல்புடையவை. ஒரு நரிக் குடும்பத்தில் வளர்ந்த ஓர் ஆண் நரியும் இரண்டு, மூன்று பெண் நரிகளும் நரிக் குட்டிகளும் இருக்கும். பாதுகாப்பான சமவெளி, புல்வெளி, புதர் போன்ற இடங்களில் விசாலமான, ஆழமான பள்ளங்களைத் தோண்டி அதனைத் தமது வசிப்பிடமாக எடுத்துக் கொள்ளும். ஆண் நரி தமது வசிப்பிடத்தைச் சூழ சிறுநீரால் அடையாளப்படுத்திக் கொள்ளும்.

பருவம் அடைந்த ஆண், பெண் நரிகள் இனப் பெருக்கத்தில் இணையும். இணைந்து இரண்டு மாதங்களில் குட்டிகளை ஈன்றெடுக்கும். ஒரு தடவையில் ஒரு பெண் நரி, இரண்டிலிருந்து ஏழு குட்டிகள் வரை ஈனும். குட்டிகளை ஈனும் முன்பே அவற்றுக்கு சொகுசாக இருக்க இலைகளைப் பரப்பி, விரித்து மெத்தைபோன்று அமைத்துக் கொள்ளும். பின்னர் குட்டிகளை தாயும் தந்தையும் சேர்ந்து பராமரிக்கும். சில நேரங்களில் மூத்த சகோதர, சகோதரிகளும் உணவு கொண்டு வந்து கொடுக்கும்.

பகல் நேரங்களில் வசிப்பிடத்தில் குட்டி களுடன் விளையாடி, படுத்து உறங்கிவிட்டு இரவு நேரங்களில்தான் வேட்டைக்குச் செல்லும். கூட்டமாகவே வேட்டைக்குச் செல்லும். இவை எந்த இடத்தில் வசிக்கின்றனவோ அதையொட் டியே, அவற்றின் வேட்டைப் பிரதேசமும் அமைந்திருக்கும். வேட்டைக்கு அதிக தூரம் செல்லாது. பௌர்ணமி இரவு நரிகளுக்கு மிகவும் விருப்பமான இரவு. அதில் அவை கூட்டமாகக் கிளம்பி மலை, குன்று உச்சிகளுக்கு ஏறி நிலவைப் பார்த்த வண்ணம் ஒன்று மாற ஒன்று ஊளையிட ஆரம்பிக்கும். உண்மையில் கிராமப்புறங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌர்ணமியின் நிசப்தமான அந்த இரவுகளில் நரிகளின் ஊளைச் சப்தம் மட்டும் காதுகளில் விழும்போது இனம்புரியாத ஓர் இனிமை மன துக்குள் தோன்றும். முடிந்தால் அனுபவித்துப் பாருங்கள்.

**தந்திர வேட்டை**

நரிகள் தந்திரக் குணத்திற்குப் பெயர் பெற்றவை. அவற்றின் தந்திரம் வேட்டையாடுவதிலும் எதிரி விலங்குகளிடமிருந்து தப்பித்துக் கொள்வதிலும் கூடுதலாகப் பயன்படுகின்றது. பிற விலங்குகளை ஏமாற்றி, அவற்றின் உணவைத் திருடிக் கொண்டு வந்து உண்டு விடும். கிராமப்புறங்களில் மனிதர்கள் உறங்கும் இரவு வேலைகளில் கள்ளத்தனமாக வந்து கோழி போன்ற வளர்ப்புப் பிராணிகளை வேட்டையாடிக் கொண்டு ஓடி விடும்.

நரிகளுக்கு பூனை, நாய்களைப் போன்றே இரவின் இருளிலும் நன்றாகப் பார்க்கக் கூடிய சக்தியுண்டு. அதேபோன்று, இதன் செவிகள், பூமிக்கடியில் ஓடும் எலி போன்ற உயிரிகள் எழுப்பும் சப்தத்தையும் கேட்கும் திறன் படைத் தவை. மேலும், வெவ்வேறு வகையான குரல் ஓசை களையும் பிரித்து அடையாளம் காணக்கூடியவை. மணிக்கு சுமார் 72 கிலோ மீற்றர் வேகத்தில் ஓடக்கூடியவை. இவற்றைப் பயன்படுத்தி இவற்றால் வேட்டையாடவும் தப்பியோடவும் முடியும்.

தமது வசிப்பிடத்தை அமைக்கும்போது கூட பல வாயில்களை வைத்துக் கொள்கின்றன. ஒரு வாயிலால் ஆபத்து வந்தால் மற்றைய வாயிலால் தப்பித்து விடும் தந்திரம்தான்.

**உணவு**

நரி ஊனுண்ணி விலங்காகும். பிற விலங்குகள் வேட்டையாடித் தின்றுவிட்டு மிச்சம் வைத்து விட்டுச் செல்லும் மாமிசப் பகுதிகளை இவை உண்ணும். அத்தோடு எலி, பல்லி, பாம்பு, அணில், நண்டுகள், கரையான், முயல்கள், பறவைகள், மயில்கள், பழங்கள் என அனைத்தையும் உண் ணும். இதன் வசிப்பிடம் கடலோரமென்றால் நண்டு, மீன்களையும் கூட வேட்டையாடிச் சாப் பிடும். பருவ கால மாற்றத் திற்கு ஏற்ப என்ன உணவு கிடைக்குமோ அவற்றை உண்ணும் பழக்கமுடையவை. பெரும்பாலும் கிராமப் பகுதிகளின் அருகில் தென்படும் நரிகள் அங்குள்ள கோழிகளையும் அவ்வப்போது பிடித்துச் செல்லும்.


**சூழல் சமநிலை பேணுவதில் நரிகள்**

எமது சூழலில் உள்ள சிறிய விலங்குகளின் துரித வளர்ச்சியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத் திருப்பது நரிகள்தான். வனாந்தரங்களில் சிங்கம், புலி, சிறுத்தை முதலிய விலங்குகள் உணவுச் சங்கிலியின் மேல் நிலை வேட்டை விலங்குகளாக (Predators) விளங்குகின்றன. இவற்றிற்கு முதல் கட்டத்தில் இருப்பவை நரி, குள்ள நரி போன்ற விலங்குகள்தான். நரிகளின் முக்கியமான வேலையே காட்டு எலி, அணில், பல்லி போன்ற சிறிய விலங்குகளையும் மயில் போன்ற பறவை களையும் வேட்டையாடி அவற்றின் வளர்ச்சியை கட்டுப்படுத்துவதுதான்.

மயில்களின் முக்கியமான எதிரியாக இருப்பது நரிகள்தான். வயல்வெளிகளை ஒட்டி இருக்கிற இடங்களில் நரிகள் வசித்ததால்தான் மயில்கள் அவ்வளவாக வயல்பகுதிகளுக்கும் விவசாய நிலங்களுக்கும் ஆரம்ப காலங்களில் வராமல் இருந் திருக்கின்றன. ஆனால், நரிகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கியதும் மயில்களின் எண்ணிக்கை அதிகரித்து விவசாய நிலங்களை சேதப்படுத்தும் நிலை உருவாகியுள்ளது. அநேக விவசாயிகளுக்கு இப்போது பெரும் தலைவலியாக இருப்பது மயில்கள்தான். பழங்களையும் நரிகள் உட்கொள் வதால் வித்துப் பரம்பலுக்கும் உதவுகின்றது. வயற்புறங்களின் அருகாமையில் சுற்றித்திரியும் நரிகள் அங்குள்ள எலிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவும் உதவுகின்றன. இதனால் எலிக் காய்ச்சல் நோய் பரவுவதும் தடுக்கப்படுகின்றது.

**அழிவின் விளிம்பில் நரிகள்**

காடுகளில் வாழும் நரிகள் பெரும்பாலும் 3 ஆண்டுகள் வரை வாழ்கின்றன. எனினும், மிருகக்காட்சிசாலைகளில் பாதுகாப்பாக வளர்க்கப்படும் நரிகள் பத்து முதல் பன்னிரண்டுக்கும் அதிகமான ஆண்டு கள் வரை உயிர் வாழ்வ துண்டு.



31 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்து

## இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்

முதலாவது உலக மகாயுத்தத்தின்போது துருக்கி ஜேர்மனியுடன் சேர்ந்து கொண்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இளம் அரேபிய இயக்கம் வலிமை பெறுவதாயிற்று. ஷரீப் ஹுஸைன் தேவைப்பட்ட ஆயுதங்களையும் படைத் தளபாடங்களையும் சேகரித்தார். இறுதியில், துருக்கிய மேலாதிக்கத்தை எதிர்த்து அரேபிய விடுதலையை அவர் பிரகடனப்படுத்தினார். இந்த நடவடிக்கைக்குப் பிரித்தானியர் அனுசரணையாக இருந்தனர்.

✍ எம்.ஏ. ரஹ்மான்

இந்த வகையிலே, கர்னல் லோறன்ஸ் என்பவர் அரேபியர்களுக்குத் தோன்றாத் துணையாக அமைந்தார். ஷரீப் ஹுஸைன், அமீர் பைஸல் ஆகிய தலைவர்களுக்குப் பின்னாலே நின்று சக்திமிக்க சூத்திரதாரியாக இயங்கினார். அவர் ஒரு மர்ம மனிதராகப் பாராட்டப்பட்டார். தம்மிடையே சண்டை பிடித்த பல்வேறு அரேபிய குலங்களையும், துருக்கியருக்கு எதிரான போரிலே ஒன்றிணைத்த பெருமையும் அவரையே சாரும். எனவே, துருக்கிய அரசாங்கம் அவர் மீது விரோதம் பாராட்டுதல் தவிர்க்க முடியாததாக அமைந்தது. லோறன்ஸைக் கைது செய்ய உதவுபவர்களுக்கு ஏழரை இலட்சம் ரூபாய் சன்மானம் அளிக்கத் துருக்கிய அரசாங்கம் முன்வந்தது.

ஒருநாள் மாறுவேடம் புனைந்து கொண்டு துருக்கியப் படை வரிசையைப் பார்வையிடச் சென்றார். அவர் பனூ ஸாகர் பகுதியிலே தங்க நேர்ந்தது. இங்கே வாழ்ந்த கோத்திரத்தார் துருக்கிய எஜமானர்களுக்கு விசுவாசமானவர்களாகக் காணப்பட்டார்கள். அந்தக் கோத்திரத்தாரின் ஷேக்கினைச் சந்தித்து நட்பு பாராட்டினார். ஷேக்கின் விருந்தினராக லோறன்ஸ் தங்கியிருந்தார்.

துருக்கியர் அளிப்பதாக அறிவித்த கொழுத்த சன்மானததைப் பெறும் ஆசைக்கு ஷேக் மசிந்தார். இதனால் தூதர் ஒருவரைத் துருக்கியரிடம் அனுப்பி வைத்தார். இதனை மோப்பம் பிடித்த லோறன்ஸ் தப்பியோடினார்.

விருந்தினர் ஒருவரைக் காட்டிக்கொடுப்பது இஸ்லாத்திற்கு முரணானது. பனூ ஸாகர் கோத்திரத்தார் அவமான உணர்வு பெற்றார்கள். அவர்கள் ஒன்றுகூடி நஞ்சிட்ட கோப்பியை அருந்துமாறு தங்களுடைய ஷேக்கினை நிர்ப்பந்தித்தார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஆசிரியர் தினம் பற்றி சில தகவல்கள்

- ❑ தாய்லாந்து - ஜனவரி 16 1956 ஆம் வருடம் முதல் கொண்டாடப்படும் இத்தினம் பாடசாலை விடுமுறை தினமாகும்.
- ❑ ஈரான் - 1980 மே 02 ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்ட பன்னூல் ஆசிரியரும், ஓய்வில்லா ஆசானுமாகிய பேராசிரியர் ஆயதொல்லா மொர்தாஸா மொதாஹ்ஹரி அவர்களை நினைவுகூறும் முகமாகவே இத்தினத்தை ஈரானியர்கள் தமது ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகின்றனர்.
- ❑ ஐக்கிய அமெரிக்கா - மே முதலாவது வாரத்தின் செவ்வாய்க்கிழமை இத்தினம் கொண்டாடப்படும். அன்றைய தினம் உத்தியோகப்பற்றற்ற விடுமுறை நாளாகக் கருதப்படும்.
- ❑ மலேசியா - மே 16 இல் ஆசிரியர் தினத்தை 'ஹரி குரு' என்ற பெயரிலும் அழைப்பர். நாடு முழுவதும் மிக உற்சாகத்துடன் விமரிசையாகக் கொண்டாடுவர். எனினும், அன்றைய தினம் விடுமுறை நாள் அல்ல.
- ❑ சீனா - 1931 இல் தேசிய பல்கலைக்கழகம் ஆசிரியர் தினத்தை ஆரம்பித்தது. பிறகு சீனாவின் தத்துவஞானி கொன்பியூஸியஸ் பிறந்த தினமான ஆகஸ்ட் 27 க்கு மாற்றப்பட்டது. தொடர்ந்து நிகழ்ந்த அரசியல் பிறழ்வுகளினால் மீண்டும் அது செப்டெம்பர் 10 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டது.
- ❑ இந்தியா - செப்டெம்பர் 5 இல் இந்தியாவின் இரண்டாவது ஜனாதிபதியான கலாநிதி சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களை கௌரவிக்கும் முகமாக அன்னாரது பிறந்த நாளில் ஆசிரியர் தினமும் கொண்டாடப்படுகின்றது.
- ❑ இந்தோனேஷியா - 2012 ஆம் ஆண்டுக்குரிய உலக ஆசிரியர் தினக் கூற்றாக ''எனது ஆசான், எனது வீரன்'' **(My Teacher My Hero)** எனப் பிரகடனப்படுத்தி, செப்டெம்பர் 05 - ஒக்டோபர் 05 வரை 'உலக ஆசிரியர் மாதம்' என்றும் பிரகடனப்படுத்தியுள்ளமை கவனிப்புக்குரியது.
- ❑ ரஷ்யா - 1965 முதல் 1994 வரை ஒக்டோபர் மாதம் முதலாம் ஞாயிற்றுக்கிழமை ஆசிரியர் தினத்தைக் கொண்டாடினர். 1994 இன் பின் உலக ஆசிரியர் தினத்துடன் இணைந்து ஒக்டோபர் 05 ஆம் திகதி இவர்கள் கொண்டாடுகின்றனர்.

**✍ தொகுப்பு: பீதா அய்மன்**
**அறக்கியால**




## சில நாடுகளின்
# ஆசிரியர் தின நிகழ்வு

| | |
|---|---|
| ❖ ஆப்கானித்தான் | : ஒக்டோபர் 3 |
| ❖ அல்பேனியா | : மார்ச் 7 |
| ❖ அல்ஜீரியா | : பெப்ரவரி 28 |
| ❖ ஆஜன்டீனா | : செப்டெம்பர் 11 |
| ❖ பஹ்ரைன் | : பெப்ரவரி 28 |
| ❖ பூட்டான் | : மே 2 |
| ❖ பிறேசில் | : ஒக்டோபர் 15 |
| ❖ சிலி | : ஒக்டோபர் 16 |
| ❖ கொலம்பியா | : மே 15 |
| ❖ சீனா | : செப்டெம்பர் 10 |
| ❖ எகிப்து | : பெப்ரவரி 28 |
| ❖ ஜேர்மனி | : ஒக்டோபர் 5 |
| ❖ இந்தியா | : செப்டெம்பர் 5 |
| ❖ இந்தோனேஷியா | : நவம்பர் 25 |
| ❖ ஈரான் | : மே 2 |
| ❖ ஈராக் | : மார்ச் 1 |
| ❖ மலேசியா | : மே 16 |
| ❖ பாகிஸ்தான் | : ஒக்டோபர் 5 |
| ❖ ரஷ்யா | : ஒக்டோபர் 5 |
| ❖ சஊதி அரேபியா | : பெப்ரவரி 28 |
| ❖ சிரியா | : மார்ச் 18 |
| ❖ தாய்வான் | : செப்டெம்பர் 28 |
| ❖ தாய்லாந்து | : ஜனவரி 16 |
| ❖ துருக்கி | : நவம்பர் 24 |

**✍ அம்னா றாபி**
**குரு/தெலம்புகல்ல மு.ம.வி., தொடங்கஸ்லந்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உங்களுக்குத் தெரியுமா?

- உலகில் முதல் முதலில் சாவியைப் பயன்படுத்தியவர்கள் யார்? எகிப்தியர்கள்
- சிலோன் மத்திய வங்கி, 'இலங்கை மத்திய வங்கி' என பெயர் மாற்றம் பெற்ற ஆண்டு எது? 1985
- நைல் நதியின் நீளம் எவ்வளவு? 6,650 கிலோ மீற்றர்
- டைட்டானிக் கப்பலைச் செலுத்திய மாலுமி யார்? எட்வர்ட் ஜே. ஸ்மித்
- இலங்கையில் முதல் முதலாக ஆரம்பிக்கப் பட்ட பல்கலைக்கழகம் எது? பேராதனை பல்கலைக்கழகம்
- உலகிலேயே அதிக விலையுள்ள பூ எது? குங்குமப் பூ

**ஆர். லிகா**
**நிக/நம்முவாவ மு.ம.வி.**
**நம்முவாவ**

# வெற்றிகரமான கற்றலுக்கு



- எமது கல்வி வெற்றிகரமாக அமைய வேண்டும் என்றால் 4 உறவுகளின் திருப்தி வேண்டும். அந்த திருப்தி எமக்கு கிடைத்தால் எல்லா விடயங்களிலும் வெற்றி கிடைக்கும். அவையாவன:

1. அல்லாஹ்வின் திருப்தி
2. பெற்றோரின் திருப்தி
3. ஆசிரியரின் திருப்தி
4. நண்பனின் திருப்தி

- இந்த உறவுகளில் எதில் ஒன்றிலும் எம்மில் குறைபாடு ஏற்படுமானால் எம் வாழ்க்கை கேள்விக்குறியாகும்.

இன்ஷா அல்லாஹ், இந்த உறவுகளை மதித்து நடப்போம்.

**ஐ. அஸ்ஹா பானு**
**பாத்திமா ஸஹ்றா பெ.அ.க.**
**ஓட்டமாவடி**

# சிந்திக்க சில சிந்தனைகள்

1. தடுமாறும்போது தாங்கிப் பிடிப்பவனும் தடம்மாறும்போது தட்டிக் கேட்பவனும் உண்மையான நண்பன்.
2. கண்ணீரும் புன்னகையும் இல்லாமல் வாழ்க்கையும் இல்லை என்பதே உண்மை.
3. எதையும் சிந்தித்துச் செய்தால் நமக்கு கிடைப்பது வெற்றி; எதையும் செய்து விட்டு சிந்தித்தால் நமக்கு கிடைப்பது அனுபவம்.
4. நல்ல சிந்தனை யாருடையதாகவும் இருக்கலாம். ஆனால், எப்போதும் உழைப்பு உன்னுடையதாக இருக்க வேண்டும்.
5. பலம் பொருந்திய உடலை விட சிந்திக்கக் கூடிய மூளையே சிறந்தது.
6. சிரிப்பு இல்லாத வாழ்க்கை சிறகு இல்லாத பறவைக்குச் சமன். பறவைக்கு சிறகுதான் அழகு; எமக்கு சிரிப்புதான் அழகு.

**என். பாத்திமா**
**ஸஹ்றா வளாகம்**
**ஓட்டமாவடி**

# வாழ்வில் மூன்று

⇨ இந்த மூன்றையும் யாராலும் திருட முடியாது.
1. கல்வி 2. அறிவு 3. ஆற்றல்

⇨ இந்த மூன்று செயல்களும் மனிதனை கீழ்த்தரமாக்குகின்றன. 1. திருட்டு 2. பொய் 3. புறம் பேசுதல்

⇨ இந்த மூன்று பொருட்களும் சகோதரர்களுக்கிடையில் பகைமையை உண்டுபண்ணும்.
1. மண் 2. பெண் 3. பொன்

⇨ இந்த மூன்றும் எதையும் எதிர்பார்ப்பதில்லை.
1. நேரம் 2. மரணம் 3. மூச்சு

**ஆர். லிகா**
**நிக/நம்முவாவ மு.ம.வி.**
**நம்முவாவ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குட்டிக் கதை

# துறவியும் திருடனும்

துறவி ஒருவர் மலைப்பாங்கான பகுதியில் குதிரையில் வந்து கொண்டிருந்தார். சற்றுத் தொலைவில் ஒருவன் மயங்கி விழுந்திருந்ததைக் கண்ட அவர், குதிரையை நிறுத்திவிட்டு அவனருகில் சென்று அசைத்துப் பார்த்தார். மிகவும் களைத்துப் போயிருந்தது போல காட்சியளித்த அவன், ''தண்ணீர்... தண்ணீர்'' என அலறிக் கொண்டிருந்தான்.

அவன் மேல் இரக்கப்பட்ட துறவி சற்று தொலைவில் இருந்த நதிக்குச் சென்று தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து பார்க்க, அங்கே அவருக்கு அதிர்ச்சிதான் காணப்பட்டது. அங்கே அவனையும் காணவில்லை, அவரது குதிரையையும் காணவில்லை. அப்போதுதான் அவருக்கு திருடனான அவன் தன்னை நன்கு ஏமாற்றி விட்டான் எனப் புரிந்தது.

சிறிது காலத்தின் பின்னர் சந்தையொன்றில் அந்த திருடனை கையும் களவுமாக பிடித்துக் கொண்டார் துறவி. அவரிடமிருந்து தான் கவர்ந்த குதிரையை விற்க வந்த இடத்தில் அவன் வசமாக மாட்டிக் கொண்டான். அவனருகில் சென்றவர், ''சொல்லாதே!'' என்றார்.

திருடன் மிரண்டான். ''எது? என்ன?'' என தடுமாறினான்.

துறவி சொன்னார்,

''குதிரையை நீயே வைத்துக் கொள். ஆனால், அதை அடைந்த விதத்தை யாரிடமும் சொல்லாதே. மக்களுக்கு இப்படி ஒரு சம்பவம் நடந்தது தெரிய வந்தால் எதிர்காலத்தில் உண்மையிலேயே சாலையில் யாராவது மயங்கிக் கிடந்தால் கூட உதவ முன்வர மாட்டார்கள்.

தீயவன் நீ ஒருவன் தவறு செய்ய, நல்லவர்கள் பலருக்கு காலா காலத்திற்கு உதவி கிடைக்காமல் உயிர் போகக்கூடும்''

திருடனின் கண்களில் கண்ணீர் வழிந்தது.




# 3 கூறும் செய்தி

- அல்லாஹுத்தஆலா நட்சத்திரங்களை 3 நோக்கத்திற்காக படைத்தான்.
  1. வானத்திற்கு அழகாக.
  2. ஷைத்தானுக்கு எரிகற்களாக.
  3. தூர வழிப் பயணத்தின் வழிகாட்டியாக.
- 3 பேர் சுவனம் நுழைய மாட்டர்கள்.
  1. மதுபோதையில் மூழ்குபவன்.
  2. உறவுகளை துண்டித்து வாழ்பவன்.
  3. சூனியத்தை உண்மையென நம்புபவன்.
- 3 விடயங்கள் யாரிடம் காணப்படுகிறதோ அவர் ஈமானின் சுவையை உணர்ந்தவராவார்.
  1. ஏனைய அனைத்தையும் விட அல்லாஹ் வும் அவனது தூதரும் விருப்பத்திற்குரிய வர்களாக அவனுக்கு இருத்தல்.
  2. மற்றவர்களை அல்லாஹ்விற்காக மட்டும் விரும்புதல்.
  3. குப்ரிலிருந்து அல்லாஹ் தன்னைக் காப்பாற்றிய பின்பும் நிராகரிப்பினுள் திரும்புவதை கடுமையாக வெறுத்தல்.

**முஹம்மது றஸ்மி**
**நத்வதுல் உலமா அ.க. மூதூர் - 05**

## இலங்கைக்குரிய பறவைகள்

- **கீச்சான்** (sri Lankan woodshrike)
- **விஞ்ஞானப் பெயர்:**

**Tephrodornis pondicerianus**

இலங்கையின் அநேகமான பகுதிகளில் காண முடியும்.
இது ஒரு **woodshrike** இனப் பறவையாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. நூஹ் நபியின் மகன் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அம் மகனின் பெயர் என்ன?
2. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அதிகம் விரும்பிய ஒரு சூரா சூரத்துல் அஃலா ஆகும். இது ஹிஜ்ரத்துக்கு முன் அருளப்பட்டது. இதிலுள்ள மொத்த வசனங்கள் எத்தனை?
3. குறைஷிக் குலத்தைச் சேர்ந்த தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் யாருடைய தூண்டலால் புனித இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்?
4. சிறுவர்களில் முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றவர் யார்?
5. அல் மஸ்ஜிதுல் அக்ஸா எனும் புனித மஸ்ஜித் அமைந்துள்ள ஊரின் பெயர் என்ன?
6. சன்மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட கருமங்களுக்காகப் பிரயாணம் செய்பவர்கள் அரபியில் எவ்வாறு அழைக்கப்படுவர்?
7. அன்னை கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் மரணத்தின் பின்னர் பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மணந்து கொண்ட மனைவியர் இருவரும் யாவர்?
8. றூஹுல்லாஹ் (அல்லாஹ்வின் உயிர்) என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட நபியின் பெயர் என்ன?
9. பெருமானார் அவர்களின் பெரியதந்தை அபூதாலிப் அவர்கள் இறையடி சேர்ந்தது நபித்துவத்தின் பின் எத்தனையாம் ஆண்டிலாகும்?
10. ஹஜ்ஜின் பர்ளுகள் ஆறு, உம்றாவின் பர்ளுகள் ஐந்து. இவை இரண்டிலும் ஐந்து பர்ளுகள் பொதுவானவை. உம்றாவை விட மேலதிகமாகவுள்ள ஹஜ்ஜின் பர்ளு எது?
11. ஹம்ஸா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் நெஞ்சைக் குத்தி ஈரலை எடுத்துச் சப்பித்துப்பிய ஹிந்தா யாருடைய மனைவியாவார்?
12. இமாம் அபூதாவூத் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் ஸூனன் அபூதாவுத் ஹதீஸ் கிரந்தத்திலுள்ள ஹதீஸ்கள் எத்தனை?
13. ஹூது (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு எத்தனை ஸுஹுபுகள் அருளப்பட்டன?
14. ஹஸரத் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தமது ஆட்சியிலே நீதி செலுத்தியதில் ஓர் எடுத்துக் காட்டுத்தான், தன் சொந்த மகனுக்குத் தண்டனை வழங்கியது. அம் மகனின் பெயர் என்ன?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமையை வழங்கிய 1931 ஆம் ஆண்டின் டொனமூர் யாப்பின்படி அரசாங்க சபையில் எத்தனை பேர் அங்கம் வகித்தனர்?
2. 1946 இல் உருவாக்கப்பட்ட யுனெஸ்கோ அமைப்பின் தலைமையகம் எந்த நகரில் அமைந்துள்ளது?
3. உலகிலேயே மிக நீண்ட தேசிய கீதம் 128 வசன வரிகளைக் கொண்ட தேசிய கீதமாகும். அது எந்த நாட்டுக்குரியது?
4. இலங்கையின் பரப்பளவு எத்தனை சதுர கிலோ மீற்றர்களாகும்?
5. நாட்டின் உற்பத்தி சாதனங்கள் யாவும் சமூகத்தின் பொதுவுடைமையாக இருக்க வேண்டும் என்ற பொதுவுடைமைக் கொள்கையை உருவாக்கியவர் யார்?
6. பொதுவுடைமைக் கொள்கையை வகுப்பதில் கார்ல் மாக்ஸுக்கு உறுதுணையாய் இருந்தவர் யார்?

**(விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

## இணைக்குக.

- ❖ أُطْلُبْ مِنْ أَخِيْكَ أَنْ يَذْهَبَ مَعَكَ إِلَى الْمَلْعَبِ مَسَاءَ الْغَدِ
- ❖ أُطْلُبْ مِنْ أُخْتِكَ أَنْ تُسَافِرَ مَعَكَ إِلَى الْمَدِيْنَةِ
- ❖ أُطْلُبِيْ مِنْ أَخِيْكِ أَنْ يَذْهَبَ مَعَكِ إِلَى الْمُسْتَشْفَى مَسَاءَ الْيَوْمِ
- ❖ أُطْلُبْ مِنْ وَالِدِكَ أَنْ يَأْخُذَكَ إِلَى حَدِيْقَةِ الْحَيَوَانَاتِ
- ❖ أُطْلُبْ مِنْ عَمِّكَ أَنْ يَشْتَرِيَ لَكَ كُرَّاسَةً جَدِيْدَةً
- ❖ أُطْلُبْ مِنْ خَالِكَ أَنْ يَشْتَرِيَ لَكَ حِذَاءً جَدِيْدًا
- ❖ أُطْلُبْ مِنْ زَمِيْلِكَ أَنْ يُرَاجِعَ مَعَكَ الدُّرُوْسَ بَعْدَ صَلَاةِ الْمَغْرِبِ
- ❖ مَاذَا تَفْعَلُ إِذَا رَأَيْتَ امْرَأَةً عَجُوزًا تُرِيْدُ أَنْ تَعْبُرَ شَارِعًا مُزْدَحِمًا بِالسَّيَّارَاتِ
- ❖ مَاذَا تَفْعَلُ إِذَا قَابَلْتَ فِيْ الطَّرِيْقِ رَجُلًا فَقِيْرًا يُرِيْدُ أَنْ يَتَنَاوَلَ طَعَامًا وَلَيْسَ مَعَهُ نُقُوْدٌ
- ❖ مَاذَا تَفْعَلُ إِذَا رَأَيْتَ وَلَدًا صَغِيْرًا يَغْرَقُ فِيْ الْمَاءِ وَأَنْتَ تَقِفُ عَلَى شَاطِئِ الْبَحْرِ

- ❖ يَا خَالِيْ أَرْجُوْ أَنْ تَشْتَرِيَ لِيْ حِذَاءً جَدِيْدًا
- ❖ يَا عَمِّيْ أَرْجُوْ أَنْ تَشْتَرِيَ لِيْ كُرَّاسَةً جَدِيْدَةً
- ❖ يَا وَالِدِيْ أَرْجُوْ أَنْ تَأْخُذَنِي إِلَى حَدِيْقَةِ الْحَيَوَانَاتِ
- ❖ يَا أَخِيْ أَرْجُوْ أَنْ تَذْهَبَ مَعِي إِلَى الْمُسْتَشْفَى مَسَاءَ الْيَوْمِ
- ❖ يَا أُخْتِيْ أَرْجُوْ أَنْ تُسَافِرِيْ مَعِي إِلَى الْمَدِيْنَةِ
- ❖ يَا أَخِيْ أَرْجُوْ أَنْ تَذْهَبَ مَعِي إِلَى الْمَلْعَبِ مَسَاءَ الْغَدِ
- ❖ إِذَا كُنْتُ أَعْرِفُ السِّبَاحَةَ أَنْزِلُ إِلَيْهِ وَأُخْرِجُهُ مِنَ الْمَاءِ وَإِذَا كُنْتُ لَا أَعْرِفُ السِّبَاحَةَ أُنَادِيْ النَّاسَ لِيُسَاعِدُوْهُ
- ❖ أَذْهَبُ بِهِ إِلَى بَيْتِيْ إِذَا كَانَ قَرِيْبًا وَإِذَا كَانَ بَعِيْدًا آخُذُهُ إِلَى الْمَطْعَمِ وَأَشْتَرِيْ لَهُ طَعَامًا أَوْ أُعْطِيْهِ بَعْضَ النُّقُوْدِ
- ❖ أَذْهَبُ إِلَيْهَا وَأَقُوْلُ لَهَا مِنْ فَضْلِكِ أُرِيْدُ أَنْ أُسَاعِدَكِ ثُمَّ أُمْسِكُ الْمَرْأَةَ مِنْ يَدِهَا وَأَعْبُرُ بِهَا الشَّارِعَ
- ❖ يَا زَمِيْلِيْ أَرْجُوْ أَنْ تُرَاجِعَ مَعِيْ الدُّرُوْسَ بَعْدَ صَلَاةِ الْمَغْرِبِ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# لَا بُدَّ

١. لَا بُدَّ لِمَنْ أَخَذَ كِتَابِيْ أَنْ يَكُوْنَ قَدْ تَرَكَ كِتَابَهُ فِيْ بَيْتِهِ

எனது புத்தகத்தை எடுத்தவர் தனது புத்தகத்தை வீட்டில் வைத்துவிட்டு வந்திருக்க வேண்டும்.

٢. لَا بُدَّ لِمَنْ أَخَذَ قَلَمِيْ أَنْ يَكُوْنَ قَدْ فَقَدَ قَلَمَهُ

எனது பேனாவை எடுத்தவர் தனது பேனாவை தொலைத்திருக்க வேண்டும்.

٣. لَا بُدَّ لِمَنْ اسْتَخْدَمَ نَظَّارَتِيْ أَنْ يَكُوْنَ قَدْ فَقَدَ نَظَّارَتَهُ

எனது மூக்குக் கண்ணாடியை பயன்படுத்தியவர் தனது மூக்குக்கண்ணாடியை தொலைத்திருக்க வேண்டும்.

٤. لَا بُدَّ لِمَنْ جَلَسَ فِيْ مَقْعَدِيْ أَنْ يَكُوْنَ قَدْ نَسِيَ مَقْعَدَهُ

எனது ஆசனத்தில் உட்கார்ந்தவர் தனது ஆசனத்தை மறந்திருக்க வேண்டும்.

٥. لَا بُدَّ لِمَنْ جَاءَ مُبَكِّرًا أَنْ يَكُوْنَ قَدْ فَعَلَ هَذَا الفِعْلَ

நேரத்துடன் வந்தவர் இந்த வேலையை செய்திருக்க வேண்டும்.

٦. لَا بُدَّ لِمَنْ عَابَنَا أَنْ يَكُوْنَ قَدْ نَسِيَ دَوْرَهُ

எங்களைக் குறை கூறியவர் தனது பணியை மறந்திருக்க வேண்டும்.

٧. لَا بُدَّ لِمَنْ دَرَسَ جَيِّدًا أَنْ يَكُوْنَ قَدْ حَصَلَ عَلَى اَكْثَرِ مِنْ ثَمَانِيْنَ دَرَجَةً

நன்றாக கற்றவர் 80 இற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும்.

٨. لَا بُدَّ لِمَنْ لَعِبَ جَيِّدًا أَنْ يَكُوْنَ قَدْ حَصَلَ عَلَى الجَائِزَةِ الأُوْلَى

சிறப்பாக விளையாடியவர் முதல் பரிசைப் பெற்றிருக்க வேண்டும்.

٩. لَا بُدَّ لِمَنْ قَابَلَ الطَّبِيْبَ أَنْ يَكُوْنَ قَدْ شَعَرَ بِأَلَمٍ بِجَسَدِهِ

வைத்தியரை சந்தித்தவர் தனது உடலில் நோவினை ஒன்றை உணர்ந்திருக்க வேண்டும்

١٠. لَا بُدَّ لِمَنْ تَرَكَ الدِّرَاسَةَ فِيْ المَدْرَسَةِ أَنْ يَكُوْنَ قَدْ تَعَرَّضَ لِلفَقْرِ

தனது பாடசாலை கல்வியை விட்டவர் வறுமைக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

# لَا بُدَّ

لَا بُدَّ أَنْ نَسْتَعِدَّ لِلإِمْتِحَانِ مُنْذُ اليَوْمِ

நாம் இன்றிலிருந்தே பரீட்சைக்குத் தயாராக வேண்டும்.

لَا بُدَّ أَنْ نُنَظِّمَ حَفْلَةَ لِلأَسَاتِذَةِ

நாம் ஆசிரியர்களுக்காக ஒரு விழாவை ஏற்பாடு செய்வது அவசியமாகும்.

لَا بُدَّ أَنْ نَرْحَمَ صِغَارَنَا

எம்மில் சிறியோர் மீது இரக்கம் காட்டுவது அவசியமாகும்.

لَا بُدَّ أَنْ نُخَطِّطَ لِمُسْتَقْبَلِنَا

எமது எதிர்காலத்திற்காக நாம் திட்டமிட வேண்டும்.

لَا بُدَّ أَنْ نَمْنَعَ التَّلَوُّثَ البِيْئِيِّ

நாம் சூழல் மாசடைவதை தடுப்பது அவசியமாகும்.

لَا بُدَّ أَنْ نَحْفَظَ مَصَادِرَ المِيَاهِ

நாம் நீர் மூலங்களைப் பாதுகாப்பது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

## Assalamu alaikum dear friends,

We have been learning English for quite a long time that I am pretty much sure that all of your Language skills have improved in some way. Some of you might have improved in your writing skills, while some in their speaking skills and some might have improved in their reading skills. However, you all have a good background knowledge of the English language.

Coming to the point, how did you learn your first language? Since most of the Aharam readers are Tamil speakers, let me use the Tamil language to explain my idea. Try to recall the day when you formally learnt the rules and regulations of the Tamil language. You would have been exposed to Tamil grammar probably when you were in grade one or two isn't it? But even before going to school you were very fluent in speaking and understanding Tamil. This is called your mother tongue. You learn your mother tongue by first listening and then speaking. If this same method of learning a language is applied in your second language learning then it will be easy for you to pick up the language.

In learning any language the first lesson is to listen, then speak, then read and then finally to write. We have learnt our mother tongue in this order. Unfortunately the system in our schools and other academic institutions writing skills are focused more which is why children find it hard to grasp the linguistic knowledge.

Therefore, my dear friends if you really want to improve your English first listen to people who are conversing, watch quality TV programs, and then start talking. Even if you make mistakes in the beginning, it doesn't matter. Moreover, read a lot stories, poems plays and whatever you get just read and try to understand them.

**Here are some tips for you to improve your English**

- Don't be afraid of mistakes. Be confident. People can only correct your mistakes when they hear you make them.
- Surround yourself in an English speaking environment. The best way to learn is through speaking.
- Learn Sentences, Not Only Words
- Read out loud
- Learn a new word every day
- Use a dictionary






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

A man is granted supplication provided he does not ask for anything sinful or for breaking ties of relationship. (Muslim).

## Your Corner

# Reading makes a Full man



Reading is a good hobby and a very useful way of spending one's leisure time. Reading will make you fruitfully occupied, without wasting your precious time.

If you read you will gather knowledge. The more you read the more you gain knowledge. A person who does not read will be like a frog in the well. The students who read a lot will be able to face school and public examination with a lot of confidence.

A person who reads books, magazines and newspapers will be very knowledgeable on any field. A well read man will educate others on political or economic issues of countries, sports, scientific developments and matters relating to important issues like health. Such person will be very popular in the society. People will reach him for any advice or to get any information.


When you constantly read in any language not only you will improve your reading and writing skills in that language but also your vocabulary will be enriched. Also your composition will be of a higher standard and free of grammatical and spelling errors.

That is the reason for 17th century English philosopher sir Francis Bacun had said "reading makes a full man". This famous saying was uttered many hundred year ago shows that value and importance of reading. Therefore, teachers and parents should encourage students to read books from school and public libraries regularly. This will instill the reading habit in to young minds.

**Salamath Nasma Zihar**
**Grade: 10**
**Egodawathe, China fort, Beruwala.**

# Laugh a while:

**English Teacher:**







**Student:**

Yes Teacher. My dad and mom got married on the same day!!!

# TREES



I think that I shall never see
A poem as lovely as a tree.

A tree whose hungry mouth is pressed
Against the earth's sweet flowing breast;
A tree that looks at good all day,
And lifts her leafy arms to pray;
A tree that may in summer wear
A nest of robins in her hair;
Upon whose bosom snow has lain;
Who intimately lives with rain.
Poems are made by fools like me,
But only God can make a tree.

**Aamina Mohamed.**
**Muslim Ladies Arabic College**
**Kal-Eliya (Bibila)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# To Daffodils



Fair daffodils, we weep to see
You haste away so soon:
As yet the early-resting sun
Has not attain'd his noon
Stay, stay
Until the hasting day
Has run
But to the even song
And, having pray'd together,
We will go with you a long
We have short time to stay as you,
We have as short a spring;
As quick a growth to meet decay,
As you, or anything
We die
As your hours do and dry away
Like to the summer's rain
Or as the perals of morning's dew
Ne'er to be found again

Nafees Fathima Asna
3rd year


# Mobile phones

- Avoid using mobile phones when you are driving
- Avoid using mobile phones at petrol pumps
- When the mobile is put to charge don't receive the call, first remove the phone from the charging pin and then receive the call
- Do not use mobile phone flash at railway stations or any other place where there is a heavy electricity wire.

This is for your safety



**M.F.F Fazmina**
**No:65, Kandy road, Welamboda**




During the last school vacation we visited Singapore. In Universal Studies we saw nursery land characters like woody woodpecker, pass in Boots, Goldilocks, fairy Godmother, micky and Minnie mouse.

We wore special glasses to see the 4D show. There were Shrek, Princess Fiona and donkey. They almost came to our faces. It was nothing but cool water.

In ancient Egypt, there was a dark pyramid, we almost hit the wall the wall broke and swarms of beetles surrounded us. I also drove a desert jeep. In Hollywood we saw how lightning, thunder, earthquakes and hurricanes are set for a film.

The next day we went to Sentosa Island by cable car. In the water world we saw 2500 varieties of fish species.

We travelled in the Bird's park in a train. There were penguins, falcons, flamingoes, swans and many more birds. There was a waterfall, a swan lake, a pelican cave and a flamingo lake.

In the night safari we saw many wild animals. Singapore is a clean and beautiful city. I was very sad to leave Singapore.

**Abdur Rahman**
**Ellaramulla, Pasyala**

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

## I learn every day

| | | |
|---|---|---|
| A 61/ 5 ,<br>Zahira Road, Mawanella | Or | Mail me to<br>aharamenglish@gmail.com |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்தனைக் கதை**

# நண்பனும் நம்பிக்கையும்

முதலாம் உலகப் போரின்போது அமெரிக்காவின் ஒரு படைப்பிரிவு ஒரு மலைப் பிரதேசத்தில் எதிரிப் படைகளுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தது. தனது படைக்குச் சாதகமான சூழ்நிலையில்லாததைக் கண்ட தளபதி, தனது படைகளைப் பின்வாங்கி மலைத் தொடரின் அந்தப்பக்கம் செல்வதற்கு ஆணையிட்டான்.

இன்னும் ஒரு மலையைக் கடந்து விட்டால் எஞ்சியிருந்த வீரர்களனைவரும் காப்பாற்றப்படுவர். அப்பொழுது தளபதியுடன் பின்வாங்கிக் கொண்டிருந்த ஒரு வீரன், அப்பிரிவின் கடைசியில் நின்று போரிட்டுக் கொண்டிருந்த தனது நண்பன் சுடப்பட்டு விழுவதைக் கண்டான்.

மிக மோசமான குண்டு காயங்களுடன் விழுந்த நண்பனைச் சென்று தூக்கிக் கொண்டு வருகிறேன் என்று தன் தளபதியிடம் அனுமதி கேட்டான். ''அதனால் பலனிருக்காது. அவன் இறந்திருப்பான். அனாவசியமாக உனது உயிரையும் பணயம் வைக்காதே'' என்று அவர் கூறினார். அவன் அதைப் பற்றி கவலைப்படாமல் தனது நண்பன் விழுந்த இடத்திற்கு ஊர்ந்து சென்றான். மீண்டும் துப்பாக்கிகள் முழங்கின.

தனது நண்பனையும் தூக்கிக் கொண்டு வந்து சேர்ந்த அவனை ஆச்சரியத்துடன் பார்த்த தளபதி, ''பார்! நான் எவ்வளவோ சொன்னேன். நீ கேட்கவில்லை. அவன் இறந்து விட்டான். நீ மோசமாக காயமடைந்திருக்கிறாய். நான்தான் இதனால் பலனிருக்காது என்று முன்பே சொன்னேனே'' என்றார்.



''பலன் இருந்தது சார்!'' என்றான் படை வீரன். ''என்ன உளறுகிறாய்? அவன் இறந்து விட்டான்'' என்றார்.

''ஆனால் நான் அவனை அடையும் பொழுது அவனுக்கு உயிர் இருந்தது. நான் அவனைத் தேடிச் சென்றதில் பலனை அனுபவித்தேன். சாகும்போது அவன், 'டேவிட்! நீ கண்டிப்பாய் வருவாய் என்று எனக்குத் தெரியும்' என்று சொன்னான்.''

பிறர் நம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் உறுதிக்கு ஏற்றவராய் நடப்பதே வாழ்வின் மிகப் பெரிய சவால்.

---

**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. கன் ஆன் 2. 19
3. ஹஸரத் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் தூண்டலால்
4. ஹஸரத் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்
5. ஜெருசலேம் 6. இப்னுசபீல்
7. அன்னை ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா), அன்னை சவ்தா (ரழியல்லாஹு அன்ஹா) ஆகியோர்.
8. நபி ஈஸா (அலைஹிஸ்ஸலாம்)
9. நபித்துவத்தின் 11 ஆம் ஆண்டில்
10. அரபாவில் தரித்தல்
11. அபூசுபியானின் மனைவி 12. 4800
13. 50 14. அபூஷகுமா

**பொது அறிவு**

1. 61 பேர் 2. பரிஸ் நகரில்
3. கிரேக்கம் 4. 65610
5. கார்ல்மாக்ஸ் 6. ஏங்கல்ஸ்

---

## எண்ணங்களின் வண்ணங்கள் - 25

**தலைப்பு: மீன் தொட்டி**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 ஒக்டோபர் 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம்சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச ஆசிரியர் தினம் - ஒக்டோபர் 05
தேசிய ஆசிரியர் தினம் - ஒக்டோபர் 06



# ஆசிரியர் பணி அகிலம் போற்றும் அறப் பணி

● அயாத் அஹமட்

மனதை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளவும் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளவும் அறிவை கூர்மையாக வைத்துக் கொள்ளவும் கல்வி வழிவகுக்க வேண்டும். இம்மூன்றையும் ஒருங்கிணைத்து மாணவர்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டும் உயர்ந்த உள்ளங்களே ஆசிரியர்கள்.

இரண்டு அறைகள் வாழ்வில் இணையற்றவை. ஒன்று, கருவறை தாய் அன்பினால் ஆலிங்கனம் செய்தது. மற்றொன்று, வகுப்பறை; ஆசிரியர் அன்பினால் அரவணைத்தது. தாயானவள் வாழ்வைத் தந்து உலகத்தை அறிமுகப்படுத்துவார். ஆசிரியர் அறிவைத் தந்து வாழ்வை வெற்றி கொள்ள வழிகாட்டுவார். அவ்வாறானதொரு வாழ்வில் மறக்க முடியாத ஓர் உறவு நம் ஆசான்கள். தம்மை ஏணியாக மாற்றி, பிறரை உயர்த்தும் சுயநலமில்லா உள்ளங்கள் அவை.

ஒரு நாட்டின் தலைவிதி வகுப்பறைகளில் தீர்மானிக்கப்படுகிறது என்பார்கள் அப்படியாயின், ஒரு நாட்டின் எதிர்காலத்தை செப்பனிடும் சிற்பிகள் நம் ஆசான்கள். அவர்கள் எப்போதும் என்றும் எமது வாழ்த்துக்குரியவர்கள்; மதிப்பிற்குரியவர்கள்; போற்றுதலுக்குரியவர்கள்.

**ஆசிரிய தின நிகழ்வின் ஆரம்பம்:**

ஒக்டோபர் 05 ''உலக ஆசிரியர் தினம்'' **(World Teacher's Day)** உலகளாவிய ரீதியில் பல்வேறு விதமாகக் கொண்டாடப்படுகின்றது. யுனெஸ்கோ நிறுவனம் ஆசிரியரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக, ''ஆசிரியரின் தன்மையினைக் கருத்திற் கொண்டு அங்கீகாரமளித்தல்'' என்ற கூற்றுடன், பொதுக் கல்விக்காக அல்லது சிறப்புத் துறையொன்றுக்காக அவர்களினால் ஆற்றப்பட்டு வரும் பங்களிப்பினை மரியாதை செய்யும் முகமாக, இவ் உலக ஆசிரியர் தினத்தை அறிவித்து, வருடாந்தம் ஒவ்வொரு தொனிப்பொருளில் கொண்டாடப்பட்டும் வருகின்றது. இத்தினம் கொண்டாப்படும் நாட்களும் விதமும் நாட்டுக்கு நாடு வித்தியாசப்படுகின்றன. யுனெஸ்கோவின் புள்ளிவிபரவியல் மதிப்பீட்டு நிறுவனம் மேற்கொண்ட ஆய்வையடுத்து, 2020 ஆம் ஆண்டாகும்போது உலக நாடுகளில் 12.6 மில்லியன் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளல் என்ற நோக்கைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**2017 ஆம் வருடத்திற்கான தொனிப்பொருள்:**

இவ்வருடத்திற்கான உத்தியோகபூர்வ நிகழ்வு பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில் நடைபெறுகிறது. இவ்வருடத்திற்கான தொனிப்பொருள், ''சுதந்திரமான கற்பித்தல்; ஆசிரியர்களை வலுவூட்டல்'' என்பதாகும்.

**வகுப்பறைகள் வணக்க அறைகள்:**

கற்பித்தல் என்பது ஒரு தொழிலல்ல; அது ஒரு புனிதமான பணி என இஸ்லாம் கருதுகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிற்கு இஸ்லாத்தின் தூதை எத்திவைக்க வந்த நபிமார்களின் பணியும் கற்பித்தல் பணி ஆகும். நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ''நான் இந்த உலகத்திற்கு ஓர் ஆசிரியனாக அனுப்பப்பட்டுள்ளேன்.'' என தனது பணியைப் பற்றி சிலாகித்தார்கள்.

அல்லாஹுத்தஆலா நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை அறிமுகப் படுத்தும்போது, ''மக்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் போதிப்பவர், கற்றுக் கொடுப்பவர்'' என்று அறிமுகப்படுத்துகின்றான். (அல்ஜுமுஆ: 2)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: ''மனிதர்களுக்கு நல்ல விடயங்களை சொல்லிக் கொடுப்பவர்களுக்கு மலக்குகள் எந்நேரமும் துஆச் செய்து கொண்டிருக் கின்றனர்.'' நல்ல விடயங்களைக் கற்றுக் கொடுப் பது என்பதன் அர்த்தம், இஸ்லாத்தைக் கற்பிப்பது மாத்திரமல்ல. புவியியல், கணிதம், விஞ்ஞானம் போன்ற ஏனைய விடயங்களைக் கற்பிப்பதும் நல்ல விடயங்கள்தான். அதனை முறையாக கற்பித்தால் அவர்களுக்கு அல்லாஹ்வின் கூலி கிடைக்கும். இத்தகைய அர்ப்பணமும் தியாகமும் நிறைந்த சுவனத்திற்கு அழைத்துச் செல்லும் அறப்பணியே ஆசிரியப் பணியாகும்.

**கண்டிப்பிற்குள் வாழும் கருணை:**

ஆசிரியர் கண்டிப்பு சிலவேளைகளில் அவரை விட்டு எம்மை தொலைதூரத்திற்கு தொலைவாக்கி விடுகின்றது. அந்த கண்டிப்புக்குள் வாழும் கரு ணையை உணர்ந்து கொள்ள நாம் பல தருணங் களில் தவறி விடுகின்றோம்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் எப்போதும் ஓர் ஆசிரியராக தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வதில் பெருமைப்படுவார். தன்னுடைய சுயசரிதையில் பின்வரும் சம்வத்தைக் குறித்துக் காட்டுகிறார்:

''1954-57 ஆம் ஆண்டில் நான் மெட்ராஸ் இன்ஸ்டிடியுட் ஆப் டெக்னொலஜியில் (எம்.ஐ.டி.) படித்துக் கொண்டிருந்தபோது, விமானத்தை வடிவமைக்கும் திட்டம் எனக்கு வழங்கப்பட்டது. ஒரு குழுவினராக இணைந்து நாங்கள் செயல்பட்டு வடிவமைப்பை ஒருங்கிணைக்கும் பொறுப்பும் எனக்கு அளிக்கப்பட்டது. இந்த திட்டத்துக்கு பேராசிரியர் சீனிவாசன் தலைமை தாங்கினார். என்னுடைய திட்டத்தைப் பார்த்து தெளிவில்லாமல் இருப்பதாகவும் அதனால் அவர் ஏமாற்றம் அடைந்ததாகவும் தெரிவித்தார். வெவ்வேறு குழு உறுப்பினர்களிடமிருந்து நான் தகவல்களைப் பெற்று ஒன்றிணைக்க முடியாததால் அதைச் செய்து முடிக்க அவரிடம் நான் ஒரு மாத அவகாசம் கேட்டேன். இவற்றையெல்லாம் அவர் காது கொடுத்துக் கேட்கவில்லை.

''இன்று வெள்ளிக்கிழமை. திங்கட்கிழமை காலை வரை நான் மூன்று நாள் அவகாசம் தருகிறேன். அதற்குள் விமான வடிவமைப்பை முடிக்கவில்லை என்றால் உங்களுக்கு வழங் கப்படும் உதவித் தொகை 'கட்' ஆகிவிடும் என்று கடுமையான தொனியில் கூறிவிட்டார். இவ்வாறு அவர் சொன்னது எனக்கு தூக்கிவாரிப் போட்டது. ஏனெனில், ஸ்காலர்ஷிப்பை நம்பித்தான் என் படிப்பு இருந்தது. வேறு வழியில்லை, அந்த திட்டத்தை முடித்துத்தான் ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தொடந்து நம்பிக் கையுடனும் திடமான மன உறுதியுடனும் எப் படியும் இதைச் சாதித்து விட வேண்டும் என்ற இலட்சியத்துடனும் ஓய்வின்றி தொடந்து நானும் எனது நண்பர்களும் உழைத்தோம்.

ஞாயிற்றுக்கிழமை காலையில் நாங்கள் ஏறத் தாழ வடிவமைப்பை முடிக்கும் நிலையில் இருந் தோம். ஆய்வுகூடத்தில் யாரோ நிற்பதுபோல் உணர்வு. திரும்பிப் பார்த்தால் அவர் பேராசிரியர் சீனிவாசன். 'உங்களை நிர்ப்பந்தம் செய்து, நான் கடுமையான தொனியில் அறிவுறுத்தி, காலக்கெடு நிர்ணயித்ததால்தான் இப்போது சிறந்த வடிவமைப்பு கிடைத்துள்ளது' என்று எங்களைப் பாராட்டினார்; கௌரவித்தார். ஏதாவது நெருக்கடி அளிக்கும் பட்சத்தில்தான் நமது சிந்தனை செயல்படத் துவங்குகிறது. திறமையை உருவாக்க இது ஒரு யுக்தி என்பதை நான் அப்போது அறிந்தேன்.''

இவ்வாறுதான் எமது ஆசிரியர்களும் மன திற்குள் ஈரத்தை வைத்துக்கொண்டுதான் எமது இலட்சியதை அழகாக வரைந்திட முயற்சி செய்கின்றார்கள்.

ஆசிரியர்களின் அன்பைப் புரிந்து, அவர்களின் வழிகாட்டல் மூலம் கிடைக்கும் வாழ்வின் வெற்றி இரகசியங்களை உணர்ந்து சிறந்த மாணவர்களாக திகழ்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# என்னை செதுக்கியவள்...!

எப். ஜஸ்ரா ஜஸிர்
ஸஹ்றா வளாகம்

"என்ன நபீல்! மாணவ மன்றத்துல பேச்சுக்கு பெயர் கொடுத்திருக்கிறயாம்..."

யாரோ கேட்டதும் சடாரென ஒரு சிரிப்பலை வகுப்பு முழுக்க பரவியது. இடைவேளை முடிந்து வந்து பார்க்க கரும்பலகையில், "பிரபல பேச்சாளர் நபீல் அவர்களுடைய பேச்சைக்காண ஆவலுடன் அடுத்த மாணவ மன்றத் திற்கு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்" என யாரோ ஒருவர் கிறுக்கியிருந்தார். ஒட்டுமொத்தத்தில் முழு பாடசாலையும் விளம்பர பலகையில் போட்டிருந்த என் பெயரைப் பார்த்து கிண்டலடித்துக் கொண்டிருந்தது.

மௌனமாக விழிகளை மூடினேன். கடந்த மாதம் நடந்த மாணவ மன்றத்தில் நான் அவமானப்பட்டு தலைகுனிந்தது படம் போல மனக்கண்களில் ஓடியது.

நெஞ்சுக்குள் ஏதோ புகையத் தொடங்கியது. கைவிரல்கள் நடுங்க ஆரம்பித்தன. இதயம் வேகமாக அதிரத் தொடங்கியிருந்தது. வேர்வை முதுகில் வெள்ளமாக ஊற்றெடுத்து ஓடி வழிவது தெளிவாக விளங்கியது.

ஒரு கணம் நிமிர்ந்து பார்த்தேன்.

எல்லாரும் என்னையே பரிகாசமாக பார்த்துக் கொண்டிருப்பதுபோல தோன்றியது. மானம் போய் விட்டது என மனம் முணுமுணுத்தது. மாணவ மன்றத்தில் பேச்சுக்காக பெயர் கேட்டபோது ஏதோ தைரியத்தில் பெயரைக் கொடுத்து விட்டேன். ஆனால், மேடையில் பெயர் சொல்லி அழைத்தவுடன் இப்போது கை கால்கள் உதறத் தொடங்கி விட்டன. நாக்கு தொண்டை அடிக்குழியில் சிக்கி விட்டது. நல்ல பாம்பு ஒன்று காலைச்சுற்றிக் கொண்டது போன்று உடலெல்லாம் நடுங்கத் துவங்கியது.

வேறு வழில்லை. மெதுவாக மேடையில் இருந்து இறங்கி வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கி விட்டேன். அரங்கு முழுக்க என்னைப் பார்த்து 'கொல்' என்று நக்கலாக சிரிப்பது தெளிவாகக் கேட்டது. வேகமாக ஓடத்துவங்கினேன். பின்னால் பரீனா டீச்சர் மட்டும் என் பெயரை சொல்லிக் கொண்டு துரத்தி வருவது மங்கலாக விளங்கியது.

வீட்டுக்கு வந்த பின்னர் கூட மனதின் பதபதைப்பு நீங்கவில்லை. இனி எந்த முகத்துடன் பாடசாலைக்குப் போவது என





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயக்கமாகவே இருந்தது. பாடசாலையில் நடந்த சங்கதி ஊர் முழுக்கப் பரவியிருந்தது.

''எங்களோட மட்டும் வங்காள விரிகுடா மாதிரி வளவள என்று பேசுவான். ஆனால், ஸ்கூல்ல மாணவ மன்றத்துல பேச ஏலா'' என்று இடையிலேயே இறங்கி ஓடிவந்துட்டானாமே...''

என ஒரு நாள் உம்மம்மா வாப்பாவிடம் பேசிக் கொண்டிருந்தது தெளிவாக கேட்டது.

❁ ❁ ❁

இரண்டு நாட்களுக்கு பின்னர், கண்களைக் கசக்கிவிட்டு எழுந்து பார்க்க எதிரே பரீனா டீச்சர் நின்று கொண்டிருந்தது தெளிவாகத் தெரிந்தது. என்னைத்தேடி வீட்டுக்கே வந்து விட்டார்கள்.

பாடசாலையில் நடந்த எந்த ஒன்றை பற்றியும் டீச்சர் துளியும் பேசவில்லை. ஏதோ சகஜமாக வந்ததுபோல சரளமாக பேசி விட்டு போகும்போது மட்டும் தன்னை வந்து சந்திக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

அடுத்த நாள் டீச்சரை சந்திக்கப் போயிருந்தேன்.

''நபீல், உனக்குள் நிறைய திறமைகள் இருக்கு. திறமைகளைத் தருவது அல்லாஹ். அந்த திறமைகளை வைத்து சாதனைகள் படைக்கப் போகின்றோமா இல்லாவிட்டால் சராசரியாகவே வாழ்ந்துவிட்டுப் போகப் போகின்றோமா என்பது நமது கையில்தான் உள்ளது.

அன்று மேடையில் நடந்தது சகஜமாக எல்லாருக்கும் நடப்பதுதான். எவ்வளவு பெரிய பீரங்கி பேச்சாளராக இருந்தாலும் அவருக்கு மேடையில் ஏறிய உடன் லேசாக கைகால்கள் நடுங்குவது இயல்புதான். அந்தப் பயத்தை எட்டி உதைந்துவிட்டு தைரியமாக முன்னோக்கிப் போனால் இந்த உலகில் எதையும் சாதிக்கலாம்.

நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். தைரியமாக அடுத்த மாணவ மன்றத்தில் நீ ஏறிப் பேசனும்''

டீச்சர் பேசப் பேச உடம்புக்குள் ஒரு புது மின்சாரம் பாய்வது போல இருந்தது. அடுத்த மாணவ மன்றத்தில் ஏறி, நடந்த அவமானத்திற்கு பழிக்குப் பழி வாங்காமல் விட மாட்டேன் என்ற திடத்துடன் திரும்பி வந்தேன்.

டீச்சர் படிப்படியாக பயிற்சி தரத் தொடங்கினார்கள்.

யாருமே இல்லாத மேடையில் என்னை ஏற்றிப் பேசச் சொல்லி, நான் விடுகின்ற தவறுகளை சுட்டிக் காட்டினார்கள்.

பிரபல பேச்சாளர்கள் சீடிக்களைத் தந்து என்னைப் பார்க்க வைத்தார்கள்.

வகுப்பறைக்குள்ளேயே சின்னச் சின்ன மாணவ மன்றங்கள் வைத்து, எனக்கு பேசுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கி தந்தார்கள்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக என்னைக் காணும்போதல்லாம் ''உன்னால் முடியும்! உன்னால் முடியும்!'' என தன்னம்பிக்கையை அள்ளித் தந்தார்கள்.

அடுத்த மாணவ மன்றத்தில் மேடையில் நான் ஏறியபோது யாராலும் அதை நம்பவே முடியவில்லை. எல்லாருடைய முகத்திலும் கேலியும் கிண்டலுமே நிறைந்திருந்தன. எனது வகுப்பு தோழர்கள் கூட தமக்குள் கிசுகிசுத்து நக்கலடித்து சிரிப்பது தெளிவாக விளங்கியது. ஆனால், பரீனா டீச்சர் மட்டும் உன்னால் முடியும் என என்னைப் பார்த்து நம்பிக்கையுடன் சற்று தொலைவில் புன்னகைத்துக் கொண்டிருந்தார்கள்.


நான் பேச ஆரம்பித்தேன். அதே பழைய பயம் வந்து காலைச் சுற்றப் பார்த்தது. ஆனால், அதைக் கண்டு கொள்ளாமல் படபட வென பேச ஆரம்பித்தேன். அரங்கத்தில் இருந்த எல்லாருடைய முகமும் ஆச்சரியத்தால் மாறத் துவங்கியது. குண்டூசி விழுந்தால் கூட தெளிவாக கேட்கும் அளவு மாணவ மன்றம் அமைதியாகியது.

பேசி முடிந்ததுதான் தாமதம். எல்லாரும் எழுந்து நின்ற கைதட்டத் தொடங்கினார்கள். தாங்க முடியாத ஆனந்தத்தில் எனக்கு கண்ணீரே வந்து விட்டது. மங்கலாகத் தெரிந்த மண்டபத்தின் ஓரத்தில் பரீனா டீச்சரும் கண்களை துடைத்து கொண்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது.

எவ்வளவு அற்புதமான டீச்சர் நீங்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



– ஆசிரியர் எம்.எச்.எம். நாளிர் –

# அறிவாளுமையின் அத்திவாரம் அர்த்தமுள்ள வாசிப்பாகும்

**அகரம்**: உங்களைப் பற்றி சிறிய அறிமுகமொன்றை எங்களுக்கு வழங்க முடியுமா?

**ஆசிரியர் எம்.எச்.எம். நாளிர்**: நான் வெலிகமவில் 1943 ஆம் ஆண்டு பிறந்தேன். தந்தையான ஹனீபா மற்றும் தாய் ஸபா உம்மா ஆகியோரின் அழகான வழிகாட்டல் அப்போதே எனது ஆளுமைக்கு உரமூட்டியது. வெலிகமவில் அரபா தேசிய பாடசாலையில் கல்வி கற்ற எனக்கு முதலாவது ஆசிரிய நியமனமும் (1963) அங்கயே கிடைத்தது. அங்கு சிறிது காலம் கடமையாற்றிய பின் கொழும்பு ஹம்ஸா முஸ்லிம் பாடசாலைக்கு மாற்றலாகி வந்தேன். பின்னர் எனது கற்பித்தல் பணியை கொழும்பில் ஓய்வு பெறும் வரை அல்ஹிதாயா, மட்டக்குளி மு.வி., ஹமீத் அல்ஹுஸைனி கல்லூரி என்பவற்றில் கடமையாற்றி, 1999 இல் ஓய்வு பெற்றேன். ஓய்வு பெற்ற பின், குரு/கலாநிதி சஹாப்தீன் உயர் கல்வி நிலையத்தில் மூன்று ஆண்டுகள் விரிவுரையாளராக கடமையாற்றினேன். தொடர்ந்து குரிகொடுவ ஹாதியா வளாகத்தில் மூன்று ஆண்டுகள் அதிபராக பணியாற்றினேன். இரண்டு ஆண்டுகள் பாதிஹ் கல்வி நிறுவனத்தில் ஆசிரியராக பணியாற்றியிருக்கிறேன்.

கொழும்பு பாடசாலைகள், அரபு மத்ரஸாக்கள் மற்றும் ஹாதியா இஸ்லாமிய வளாகத்தில் அதிபராக... என எனது கல்விப் பணி வியாபித்தது, அல்ஹம்துலில்லாஹ். இஸ்லாமிய நாகரிகம், தமிழ் போன்ற பாடங்களை அதிகமாக கற்பித்திருக்கின்றேன்.

**அகரம்**: உங்களுக்கும் உங்கள் ஆசிரியர்களுக்குமிடையிலான தொடர்புகள் பற்றி?

**ஆசிரியர் எம்.எச்.எம். நாளிர்**: மிக அருமையான ஆசிரியர்கள் கிடைத்தார்கள், அல்ஹம்துலில்லாஹ். அதில் முக்கியமாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர் எமது பாடசாலையில் அதிபராகவும் ஆங்கில ஆசானாகவும் இருந்த ஏ.எச்.எம். வபா அவர்களாவார். மாணவ மன்றங்களிலும் மற்ற இடங்களிலும் எங்களை அவதானித்து, எங்களை தனியாக அழைத்து, "எவ்வாறான வழியில் எம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் வழிகாட்டுவார்.

மாணவ பருவத்தில் நான் கல்வியை விட்டு ஒதுங்கக்கூடிய இரண்டு சோதனைகள் ஏற்பட்டன. அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ் அவரின் ஆலோசனை, வழிகாட்டல்கள் மூலமாக வழியேற்படுத்தி, எனது கல்வி வாழ்வைத் தொடரச் செய்தான், அல்ஹம்துலில்லாஹ்

**அகரம்**: சர்வதேச ஆசிரிய தின கொண்டாட்டங்கள் தற்போது நாடளாவிய ரீதியில் பிரபலமடைந்திருக்கின்றன. இந்த அருமையானதும் அர்த்தமுள்ளதுமான தருணத்தில் மாணவர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் விடயங்கள் எவை?

**ஆசிரியர் எம்.எச்.எம். நாளிர்**: வாசிப்பு அவர்களுக்கு அவசியமானதாகும். அதுவே அவர்களின் ஆளுமையை வளர்க்கின்றது. எனது வாழ்வின் மிக முக்கிய அடைவுகளில் ஒன்று எனக்கு கற்றுத் தந்த ஆசிரியர்களுக்கும் நான் கற்றுக் கொடுத்திருக்கின்றேன். எனது மாணவர்களிடமும் நான் கற்றிருக்கின்றேன் என்பதாகும். அதேபோல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களும் தம்மை வளர்த்துக் கொண்டு சாதனைகள் புரிய வேண்டும். அந்த வளர்ச்சிக்கு வாசிப்பு நிச்சயமாக துணை புரியும்.

1979 ஆம் ஆண்டு நான் சந்தித்த மாணவன் ஒருவன் எனக்கு வாசிப்பு பற்றிய பாடமொன்றை ஆழமாக கற்றுத் தந்தான். அப்போது க.பொ.த (சா.த.) மாணவர்களுக்கு தமிழ் பாடம் கற்பிக்கச் சென்றபோது, அந்த வகுப்பில் ஒரு சலசலப்பு தோன்றியது. என்னவென்று விசாரித்த போதுதான், அங்கு ஒரு மாணவன் இந்திய புத்தகமொன்றை வாங்கி ஏனையோருக்கும் வாசிக்கக் கொடுப்பதில் ஏற்பட்ட சலசலப்பு என புரிந்தது. மிகவும் வறுமைப் பட்ட அந்த மாணவன், ரூபா. 3.50 பெறுமதியான அந்த புத்தகத்திற்கான பணத்தை ஒவ்வொருவருக் கும் வாசிக்கக் கொடுத்து பெற்றுக் கொள்ளும் 25 சதத்தின் மூலமாகவே அடுத்த புத்தகத்தை வாங்குவான். இவ்வாறு தானும் வாசித்து மற்ற சகோதரர்களும் வாசிப்பதற்கான ஒரு வழிமுறையை அந்த மாணவன் காண்பித்துக் கொடுத்தான்.

அந்த மாணவனின் செயல் வாசிப்பு பற்றிய பாடத்தை எனக்கும் கற்றுத் தந்தது. அன்றிலிருந்து நானும் எனது ஒவ்வொரு மாதச்சம் பளத்திலும் ஒவ்வொரு புத்தகத்தை வாங்கத் தொடங்கினேன். இதேபோன்று, மாணவர்களும் வாசிப்பில் கவனம் செலுத்த வேண்டும். மாணவர்கள் பரீட்சைக்காக மாத்திரம் கற்பதோடு நிறுத்திக் கெள்ளாமல் வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்ளவும் மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் முயற்சிக்க வேண்டும்.

பாடசாலைக் கல்வி வெறும் பரீட்சையை மாத் திரம் இலக்காக கொண்டதல்ல. அறிவு, திறன், மனப்பாங்கு, செயற்பாடு, என நான்கு வகையான திறன்களையும் வளர்த்துக் கொள்ளக்கூடியதாக அது அமைய வேண்டும். கற்றல்-கற்பித்தல் செயற் பாட்டிலும் சரி, வெளிக்கள செயற்பாடுகளிலும் சரி இந்த நான்கு அம்சங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

**அகரம்**: ஆசிரியர்களை கௌரவிக்கவே ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. ஏக காலத்தில் அது ஆசிரியர்களுக்கு சில பாடங்களையும் விட்டுச் செல்கின்றது. நீங்கள் ஆசிரியர்களுக்கு வழங்க விரும்பும் அறிவுரைகள் எவை?

**ஆசிரியர் எம்.எச்.எம். நாளிர்**: ஆசிரிய தினம் ஆசிரியர்களை கௌரவிப்பதற்காக அனுஷ்டிக் கப்படுகின்றது. உண்மையில் இது பாராட்டப்பட வேண்டிய முக்கிய விடயம்தான். அதேநேரம், இந்த ஆசிரிய தினத்தை அடிப்படையாக வைத்து ஆசிரியர்களுக்கு நினைவூட்ட வேண்டிய சில முக்கிய விடயங்களும் உள்ளன.

1. மாணவர்களிடம் நாம் உருவாக்க விரும்பும் முதலாவது விடயம் அவர்களது மனப்பாங்கு களை விருத்தி செய்தலாகும். ஆளுமை மிக்க மனப்பாங்குகளைக் கொண்ட மாணவ சமூ கத்தை உருவாக்குவதே நமது முதல் இலக்காக இருக்க வேண்டும்.
2. பாடத்திட்டத்தைப் பற்றி நாம் பூரணமாக அறிந்திருக்க வேண்டியது எந்த அளவு அவசி யமோ அந்த அளவு மாணவர்களைப் பற்றியும் அறிந்திருப்பது அவசியமாகும். ஜோனுக்கு இலத்தீன் கற்பிக்க வேண்டும் என்றால் இலத் தீனையும் நாம் அறிந்திருக்க வேண்டும், ஜோனைப் பற்றியும் நாம் புரிந்திருக்க வேண்டும் என்ற கற்பித்தல் பொது விதியின் அடிப்படையை ஆசிரியர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.
3. மாணவர்களை ஆசிரியர்கள் நெறிப்படுத்த பல உத்திகள் இருக்கின்றன. அவர்களோடு கலந்துரையாடி, நெறிப்படுத்தி, வழிகாட்டி, ஆலோசனை கூறி, அவதானித்து வருவதுடன், தொடர்ந்து அவர்களுடன் கலந்துறவாடுவதன் மூலமுமே ஆசிரியர்கள் மாணவர்களை நல்வழிப்படுத்த முடியும்.
4. ஆசிரியர்கள் கற்பித்தலை விரிவுரையாக மாத்திரம் அமைத்துக் கொள்ளாது கலந்து ரையாடல், பங்கேற்றல் போன்ற பல்வேறு உத்திகளைக் கையாள வேண்டும்.
5. ஆசிரியர் தினம் என்பது மாணவர்களும் பிறரும் ஆசிரியரை பாராட்டும் தினமாக மாத்திரம் அமையாது ஆசிரியர்களும் தம்மைத்தாமே சுயவிசாரனை செய்ய மிகப்பொருத்தமான ஒரு சந்தர்ப்பமாகவும் கொள்ள வேண்டும். நான் எந்தளவு தூரம் ஆசிரிய பணிக்கு பொருத் தமாக இருக்கின்றேன். நான் இந்த உன்னத பணிக்காக இன்னும் எந்தளவு தூரம் என்னை வளர்த்துக்கொள்ள வேண்டும். என்மூலம் எத்தனை மாணவர்கள் முழு ஆளுமையுடை யவர்களாக வளர்ந்திருக்கிறார்கள என ஆசிரி யர்கள் தம்மை மீளாய்வு செய்துகொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களின் புன்னகையே உலகிற்கு புது வர்ணம் பூசுகின்றது. நாளைய உலகின் நம்பிக்கை நட்சத்திரமாக சிறுவர்களே இருக்கின்றார்கள். அந்த வகையில், சிறுவர்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாகவும் சிறுவர்களுக்கான உரிமைகளை அடையாளப்படுத்தவும் சிறுவர் தினம் கொண்டாடப்படுகின்றது.

**சிறுவர் உரிமை தொடர்பான வரலாறு**

சிறுவர் உரிமைகள் பற்றிப் பேசும் முதற் பிரகடனம் 1924 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. 1959 ஆம் ஆண்டு மேற்கூறிய பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டது. அதில், ''மனித குலம் சிறுவர்களுக்குரிய இடத்தை வழங்குவதற்கான கடப்பாடுடையது'' என்று கூறப்பட்டுள்ளது.

**2017 ஆம் வருடத்திற்கான சிறுவர் தின தொனிப்பொருள்:**

"தாய் தந்தை முதியோரின் பண்பு, பாசப்பிணைப்பின் ஊடாக சிறுவர்களை அவர்களின் அதிசயம் மிக்க உலகிற்கு கொண்டு செல்வோம்."


1979 ஆம் ஆண்டு சிறுவர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னரே உலகளவில் சிறுவர் உரிமைகளைப் பேண வேண்டுமென்ற புத்தெழுச்சி உருவானது. 1989 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. காலத்திற்குக் காலம் சர்வதேச தொழில் தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றில் சிறுவர் உரிமைகள் தொடர்பாக வெளியிடப்பட்ட சாசனங்களை இலங்கையும் 1992 ஆம் ஆண்டு ஏற்றுக் கொண்டுள்ளது.

**சிறுவர்களுக்கான உரிமைகள்**

இலங்கையில் சிறுவர் உரிமைகள் தொடர்பாக 1992 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சாசனத்தில் கூறப்பட்டுள்ளவற்றில் சில பின்வருமாறு:

- உயிர் வாழ்வதற்கும் அபிவிருத்திக்குமான உரிமை.
- பிறப்பால் பெயரையும் இனத்தையும் பெற்றுக் கொள்வதற்கான உரிமை.
- பெற்றோரைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் அவர்களின் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்குமான உரிமை.

# சிறுவர்களின் புன்னகை உலகிற்கு பொன்னகை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❑ பெற்றோரிடமிருந்து பிரிக்க முடியாமைக்கான உரிமை.
- ❑ கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை.
- ❑ சிந்திப்பதற்கும் மனச்சாட்சிக்கும் மதத்திற்குமான உரிமை.
- ❑ கூட்டிணைவதற்கான உரிமை.
- ❑ தனித்துவத்திற்கான சுதந்திரம்.
- ❑ போதிய கல்விக்கான உரிமை.
- ❑ ஆரோக்கியத்திற்கான உரிமை.
- ❑ ஓய்வுக்கும் விளையாடுவதற்குமான உரிமை.
- ❑ பொருளாதார சுரண்டல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை.
- ❑ பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை.
- ❑ ஆபத்தான செயல்களில் ஈடுபடுத்துவதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை.
- ❑ குரூர அல்லது சித்திரவதைகளுக்கு உட்படுவதிலிருந்து அல்லது தண்டனைகளிலிருந்து விடுபடுவதற்கான உரிமை.
- ❑ சாதாரண வழக்கு விசாரணைக்கான உரிமை.
- ❑ சுதந்திரத்திற்கும் தற்காப்பிற்குமான உரிமை.

**இலங்கையில் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள்:**

- ❑ இலங்கை சிறுவர் உரிமைகள் தொடர்பான சட்டமும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டமும் சிறுவர்களின் வயதெல்லையை பதினெட்டாக வரையறை செய்துள்ளன.
- ❑ சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற் கும் அத்தகைய துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்படுகின்ற சிறுவர்களைப் பாதுகாப்பதற்கும் சிகிச்சையளிப்பதற்குமாக இலங்கை பாராளுமன்றத்தினால் (1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம்) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.
- ❑ 1929 உடனடி தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு துஷ்பிர யோகங்களை அறிவிக்கலாம்.
- ❑ அருகில் இருக்கும் எந்தவொரு பொலிஸ் நிலையத்துடனும் தொடர்பு கொண்டு சிறுவர் உரிமை மீறல்கள் பற்றிய முறைப்பாட்டை நாம் முன்வைக்கலாம்.
- ❑ சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு நீங்கள் நேரடியாக விஜயம் செய்வதன் மூலமாகவும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகளை முன்வைக்கலாம். மும்மொழிகளிலும் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் இணையத் தளம் நிச்சயம் உங்களுக்கு உதவி செய்யும்.

**இஸ்லாத்தில் சிறுவர்களின் அந்தஸ்து**

சிறுவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுத்ததில் இஸ்லாத்திற்கு மகத்தான பங்கு உண்டு. பெண் குழந்தைகளை கொல்வதையே பெரும் திருவிழா கொண்டாட்டமாக காணப்பட்ட அன்றைய அரேபியாவில் இஸ்லாம் அதனை முற்றாகத் தடை செய்ததது. பெண் சிசுக்கொலையைத் தடைசெய்து பல குர்ஆன் வசனங்களும் இறங்கின.

சிறுவர்களுக்கு நாம் வழங்க வேண்டிய முதன்மையான உரிமை அவர்களது உணர்வுகளைப் பாதுகாப்பதாகும் என வாழ்ந்து காட்டிய நபிகளார், விளையாட்டுக்கு கூட அவர்களிடம் பொய் சொல்வதை முற்றாக தடைசெய்தார்கள். தொழுகையில் தன் மேல் ஏறி ஆக்கிரமித்த சிறுவர்களைக் கூட அவர் கடிந்து கொள்ளவில்லை. நாளைய உலகம் பூக்களின் தேசமாக இருக்க வேண்டும் என்றால் சிறுவர்களின் உணர்வுகள் கௌரவிக்கப்பட வேண்டும் என அன்றே காட்டித் தந்த அறிவியல் மார்க்கம் இஸ்லாம், இளம் வயதிலேயே அவர்களுக்கு மகத்தான பொறுப்புக்களையும் வழங்கி கௌரவித்துள்ளது.




**நாங்கள் செவிமடுக்கின்றோம்**

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும், சிறுவர்களுக்கு தேவைப்படும் நேரத்தில் பேசுவதற்கான வாய்ப்பினை வழங்குவதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்ட 24 மணிநேர கட்டணமற்ற உடனடித் தொடர்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கயானா
# GUYANA

ஜனாதிபதி: டேவிட் கிரேஞ்சர்



- தலைநகரம் - ஜார்ஜ்டவுன்
- ஆட்சி மொழி - ஆங்கிலம்
- பிராந்திய மொழிகள் - 11
- அரசாங்கம் - ஒற்றையாட்சி
- பிரதமர் - மோசசு நாகமுத்து
- மக்கள் - 7 35 554
- பரப்பளவு - 2 15 000
- நாணயம் - டொலர்

### அறிமுகம்

தென் அமெரிக்காவில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக உள்ள ஒரே ஒரு நாடு கயானாவாகும். ஒன்பது வகை பழங்குடி மக்கள் வாழும் கயானா பல்வேறு வகைப்பட்ட கலாசார நிகழ்வுகளுக்கு பிரசித்தமான நாடாகும். இன்னும் பசுமையாக கலாசார மரபுகள் பின்பற்றப்படுகின்றன. பரப்பள விலும் சனத்தொகையிலும் சிறிய நாடாக இருக்கும் கயானா இயற்கை எழில் நிறைந்த அற்புத தீவாகும்.

### வரலாறும் அரசியலும்

கொலம்பஸின் 1498 ஆம் ஆண்டு உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட கயானாவை முதன் முதலாக டச்சு இனத்தவர்கள் ஆக்கிரமித்தனர். இறு தியாக பிரித்தானியரிடம் கயானா சென்றடைந்தது. 1966 மே 26 ஆம் நாள் பிரித்தானியாவிடம் இருந்து கயானா விடுதலை அடைந்தது. ஆனாலும், தொடர்ந்து அமெரிக்காவின் தலையீடுகள் கயானா அரசியலில் அதிகமாக காணப்படுவதும் 1824 ஆம் ஆண்டிலிருந்து வெனிசுவெலாவுடன் எல்லை தகராறு காணப்படுவதும் குறிப்பிடத்தக்கவை.

### மக்கள்

இந்தியா, ஆபிரிக்கா, ஐரோப்பா, சீனா ஆகிய நாட்டு மக்களின் வாரிசுகளும் பழங்குடி மக்களும் வாழும் கயானாவில் இந்தோ-கயானியர்கள் எனப்படும் கிழக்கிந்தியரே பெரும்பான்மையாக வாழ்கின்றனர். அதிகமான இனத்தவர்கள் வாழ் வதால் இனக் கலவரங்களும் இங்கு ஏற்படுவ துண்டு.


### சமயம்

பெரும்பான்மையாக கிறிஸ்தவர்களைக் கொண்டுள்ள கயானாவில் 7 சதவீதமான முஸ்லிம் களும் வாழ்கின்றனர். மேலும், 4 வீதத்தினர் எந்தவொரு மதத்தையும் பின்பற்றாதவர்களாவர். அதிகமாக பழங்குடி மதங்களும் இங்கு பின்பற்றப் படுகின்றன.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மறக்காமல் படிப்பது எப்படி?

**ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)**
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology

இன்றைக்கு மாணவர்களுக்குள்ள மிக முக்கியமான பிரச்சினை ''மறக்காமல் படிப்பது எப்படி?'' என்பதுதான். இந்தக் கேள்விக்கு இலேசான பதில் என்ன? அப்டிண்ணு கேட்டா ''நம்மள நாம சரியாக புரிஞ்சிக்கிறதுதான்'' என்று பதில் சொல்லலாம். விரிவா செல்லணும்ணா, ஞாபக சக்தியோட தொடர்பு படும் மூளை எவ்வளவு சக்திவாய்ந்தது? இந்த சக்தி வாய்ந்த மூளைய வச்சிக் கிட்டு நாம என்ன பண்ணினா படிக் கிறது மறக்காம இருக்கும் என்பத நாம முதல்ல நல்லா விளங்கிட்டோம்னா, படிக்கிறதும் ஈஸி, படிச்சத மறக்காம ஞாபகத்துல வச்சிக்கிறதும் ஈஸி.

மனிதனுக்கு அடுத்ததாக கணக்கீடு களைச் செய்யக்கூடியதாக கணினிகளும் கணினிகள் பொருத்தப்பட்ட சாதனங் களும் காணப்படுகின்றன. இவற்றுள் அதிவேகமாக கணக்கீடுகளைச் செய்யக் கூடியது ''சூப்பர் கம்பியூட்டர்'' ஆகும். 2016 நவம்பர் மாதம் இடம்பெற்ற தரப் படுத்தலின்படி, உலகின் அதிவேகத் திறனுள்ள ''சூப்பர் கம்பியூட்டர்'' பட்டி யலில் சீனாவின் புதிய கம்பியூட்டரான 'சன்வே தாய்ஹூலைட்' முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இந்த சூப்பர் கம்பியூட்டர் நொடிக்கு 93 குவாட்ரில்லயன் (93,000,000,000,000,000) கணக்கீடுகளைச் செய்து முடிக்க வல்லது. இன்றைக்குள்ள விஞ்ஞானிகளின் கணிப்பின்படி, நமது மூளை ஒரு நொடிக்கு ஒரு குயின்டில் லியன் (1,000,000,000,000,000,000) கணக்கீடுகளைச் செய்து முடிக்க வல்லது. இதை விட வேகமாக கணக்கீடுகளைச் செய்து முடிக்கும் திறன் மூளைக்குண்டு எனவும் அதைத் துல்லிய மாகக் கணிப்பிட முடியாது எனவும் பல விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். நமது மூளை எவ்வளவு சக்திவாய்ந்தது என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

இவ்வளவு வேகமாகவும் விவேகமாகவும் தொழிற்படக் கூடிய மூளையை நாம் எவ்வளவு தூரம் பிரயோசனப் படுத்தியுள்ளோம்? வியக்கத்தக்க இத்தைகய மூளையை வைத்துக் கொண்டு எனக்கு படிப்பது ஞாபகம் வருவதில்லை, எல்லாமே மறந்து விடுகிறது என்று தம்மைத் தாமே தாழ்த்திப் பேசுவது எவ்வளவு பிழையானது என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

சரி, நமது மூளையை உச்சமாகப் பயன்படுத்த விசேட மருந்து மாத்திரைகள் உண்டா?

20 நாட்களில் அல்லது 30 நாட்களில் கோழி வேண்டு மென்றால் உடனே புரொய்லர் கோழிக் குஞ்சுகளை வாங்கி மருந்து மாத்திரைகளைக் கொடுத்து பெருக்க வைத்து பிரயோச னத்தைப் பெறுகின்றோம். இதுபோன்று, மூளையை ஞாபக சக்தியைக் கூட்டிக் கொள்ள மருந்து மாத்திரைகளை எடுப்பது மகா முட்டாள்தனமான செயலாகும். நமது மூளையின் வேகத்தைக் கூட்டவோ, ஞாபகத்தை அதிகரிக்கவோ செயற் கையான எந்த மருந்து மாத்திரைகளையும் உண்ணாமல், இயற்கையிலேயே கிடைக்கக் கூடிய பச்சைக் காய்கறிகளை இயலுமான அளவு பச்சையாக சாப்பிட முயற்சி செய்தால் ஞாபசக்தியை அதிகரிப் பதற்கான உடலாரோக்கியத்தைப் பேணிக் கொள்ளலாம்.

**படிக்கின்ற விடயம் மறக்காமல் இருக்க என்ன செய்யலாம்?**

ஒவ்வொரு மாணவனும் வித்தியாசமான வழி முறையைப் பயன்படுத்திக் கற்றுக் கொள்கின்றான். சிலர் வாசிப்பதன் மூலம் படிக்கின்றனர். இன்னும் சிலர் காதால் கேட்பதன் மூலமும் வேறு சிலர் கண்ணால் பார்ப்பதன் மூலமும் படிக்கின்ற அதே வேளை சொற்பமான மாணவர்கள் செயற்பாடு களினூடாகக் கற்றுக் கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிக்கின்ற விடயங்களை மறக்காமல் ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு என்ன செய்யலாம் என்பதை முதலில் நோக்குவோம்.

**1. விளங்கிக் கொள்ளல் (Understanding)**

பந்தி பந்திகளாக பக்கக் கணக்கில் உள்ள விடயம் ஒன்றை வாசிக்க வேண்டி ஏற்படும்போது, குறித்த அலகு அல்லது விடயத்தின் தலைப்பை ஒரு வெற்றுக் காகிதத்தின் மேல் பகுதியில் எழுதிக் கொள்ளுங்கள். பின்னர் குறித்த பந்திகளை வாசித்து விளங்க முயற்சி செய்யுங்கள். இதன் போது பந்திகளில் உள்ள அதே வசனங்களை ஞாபகத்தில் பதிக்காமல் உங்களுடைய சொந்த மொழியில், வசன நடையில் விளங்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

**2. இலகுவான நடையில் விளங்கப்படுத்தல் (Explain Simply)**

நீங்கள் விளங்கிக் கொண்ட விடயங்களை இலகுவான மொழி நடையில் ஏற்கனவே எழுதிக் கொண்ட தலைப்பின் கீழ் எழுதிக் கொள்ளுங்கள். எழுதும்போது புதிய ஒரு மாணவருக்கு எளிய முறையில் விளங்கப்படுத்துவது போன்று அந்த விளக்கங்கள் அமைவது சிறந்தது.

இதன்போது உங்களால் விளங்கி, விளக்கக் குறிப்புகளை எழுத முடியாமல் ஏதும் விடயங்கள் இருப்பின் அவற்றை வேறாக எழுதிக் கொள்ளுங்கள்.

**3. உங்களால் விளங்க முடியாமல் இருந்த விடயங்களை மீளவும் வாசித்து விளங்க முயற்சி செய்தல். (Study Again to Understand)**

விளக்கக் குறிப்பு எழுத முடியாமல்போன விடயங்களை மீண்டும் வாசித்து விளக்கக் குறிப்புகளை எழுத முயற்சி செய்யுங்கள். தனியாக உங்களால் முடியா விட்டால், வகுப்பில் கெட்டித்தனமாக உள்ள நண்பர்கள், பாட ஆசிரியர்கள், துறைசார்ந்தவர்கள் என யாரிடம் வேண்டுமானும் தொடர்பு கொண்டு விளங்கிக் கொள்ள முயற்சி எடுங்கள்.

4. முழுமையாக விளங்கிக் கொண்ட விடயங்களை உங்களுடைய சொந்த மொழியில் சுருக்கமான முறையில் விளக்கக் குறிப்புகளாக எழுதிக் கொள்ளுங்கள்.

**(Remove Technical Words and Explain Simply)**

இந்த நான்கு படிமுறைகளும் 'பைன்மேன் நுட்பம்' என்றழைக்கப்படுகின்றன. சுருக்கமாகச் சொன்னால் பந்திகளில் குறிப்பிடப்படும் விடயங்களை வாசித்து எமது சொந்த மொழியில் விளக்கக் குறிப்புகளாக எழுதிக் கொள்வது அல்லது இலகுவான மொழி வழக்கில் மற்றுமொரு நண்பருக்கு விளங்கப்படுத்துவது மறக்காமல் படிப்பதற்கான இலகு வழி என பைன்மேன் என்பவர் குறிப்பிடுகிறார்.

கெட்டித்தனமான மாணவர்கள் கூட வாசிக்கின்ற அத்தனை விடயங்களையும் மனனமாக்கி பரீட்சைத் தாளில் கொட்டிவிட வேண்டும் என நினைக்கின்றனர். விளக்கமில்லாமல் மனனம் செய்யும் விடயங்கள் மிக வேகமாக மறந்து விடுகின்றன. அதிலும் நமக்குப் பரிச்சயமில்லாத சொற்களைப் பாடமாக்கும்போது மறக்கும் வீதம் அதிகரிக்கின்றது. மேலுள்ள நுட்பத்தைப் பயன்படுத்தும்போது இப்பிரச்சினையிலிருந்து தவிர்ந்து கொள்ளலாம்.

வாசிப்பு உட்பட வேறு கற்றல் வழிமுறைகளையும் பயன்படுத்தி படிக்கின்ற மாணவர்கள், படித்த விடயங்களை மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள என்ன செய்யலாம் இப்போது நோக்கலாம்.

பொதுவாக கற்பது முதல் பரீட்சை எழுதும் வரை நான்கு வகையான விடயங்கள் இடம் பெறுகின்றன:

**1. பதிவு செய்தல் (Registration)**

படிக்கின்ற விடயங்களை ஞாபகத்தில் பதிவு செய்தல். எந்த வழிமுறையைப் பயன்படுத்தி நீங்கள் படித்தாலும் அவ்வாறு படிக்கின்ற விடயங்கள் ஞாபகத்தில் பதிவு செய்யப்பட வேண்டுமென்றால் பின்வரும் விடயங்கள் கவனிக்கப்படவேண்டும்:

- ❖ நீங்கள் குறித்த விடயத்தை ஆசை, ஆர்வத்துடன் படிக்க வேண்டும்.
- ❖ கவனம் செலுத்திப் படிக்க வேண்டும்.
- ❖ உங்களுடைய பார்வை, கேள்வி, சிந்தனை ஆகிய மூன்றும் படிக்கின்ற விடயத்தில் குவிமையப்படுத்தியதாக இருக்க வேண்டும்
- ❖ சிறந்த உணவுப் பழக்கமும் அளவான தூக்கமும் இருக்க வேண்டும்.


இந்த விடயங்கள் கவனிக்கப்படா விட்டால் நாம் படிக்கும் விடயங்கள் ஞாபகத்தில் ஒழுங்காகப் பதியப்படாமல் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. மீட்டல் (Re-Vision)**

படித்த விடயங்களை மீளப் பார்ப்பதே மீட்டல் எனப்படுகிறது. எம்மில் எத்தனை பேர் ஒரு நாளில் படிப்பதை அன்றைய தினமே மீட்டுகின்றோம்? பரீட்சைக்கு இன்னும் சில நாட்கள் இருக்கின்றன என்று கூறும்போதே குறிப்புக் கொப்பிகளையும் புத்தகங்களையும் புரட்டுகின்றோம். மறதிக்கு இத்தகைய பொடுபோக்கான செயற்பாடு மிக முக்கிய காரணியாக அமைகிறது. இதைப் பின்வரும் வரைபடம் மூலம் விளங்கிக் கொள்ளலாம்:




| கற்றலுக்கும் மீளக்கற்றலுக் குமிடைப்பட்ட காலம் | நினைவில் வைத்திருந்த வீதம் |
|---|---|
| 20 min | 58% |
| 1 hour | 44% |
| 9 hours | 36% |
| 24 hours | 34% |
| 2 days | 28% |
| 6 days | 25% |
| 31days | 21% |

ஏப்பிங்ஹாஸினின் இந்த வரைபடம், ஒரு மாணவன் அல்லது மாணவி ஒரு நாளில் குறிப்பிட்ட நேரத்தில் படிக்கின்ற விடயங்களை 24 மணித்தியாலங்களுக்குள் மீளப் பார்க்காமல், படிக்காமல் விட்டால் படித்ததில் 34% மாத்திரமே ஞாபகத்தில் நிற்கும் என்பதையும், ஒரு கிழமைக்குள் மீட்டா விட்டால் 25% மாத்திரமே ஞாபகத்தில் இருக்கும் என்பதையும் அதுவே ஒரு மாதத்திற்குள் மீட்டா விட்டால் 21% மாத்திரமே ஞாபகத்தில் நிற்கும், ஏனையவை மறந்து விடும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. மறுதலையாகப் பார்த்தால், குறித்த ஒரு தினத்தில் படித்த விடயங்களை ஒரு வாரத்தினுள் மீட்டா விட்டால் படித்ததில் 75% மானவை மறந்துவிடும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

நாம் எவ்வளவு காலத்தினுள் மீட்டுகின்றோம் என்பதை கணிப்பீடு செய்து நாளாந்தம் மீட்டுவதற்கு முயற்சி செய்தல் மறக்காமல் படிக்க கஷ்டமான காரியமல்ல.

**3. மீளச் சேகரித்தல் (Re-Collection)**

நாம் பதிவு செய்தல், மீட்டல் மூலம் ஞாபகத்தில் பதிந்து கொண்ட விடயங்களை பரீட்சைக் காலங்களிலும் தேவையான சந்தர்ப்பங்களிலும் மீள மனதுக்குக் கொண்டு வரும் செயற்பாடுகளை இது குறிக்கும். இதற்குப் பல நுட்பங்கள் காணப்படுகின்றன. குழுக் கலந்துரையாடல், ப்ளாஷ் காட் முறை, நிமோனிக், பிறருக்குக் கற்றுக் கொடுத்தல் போன்ற விடயங்களை உதாரணமாகச் சொல்லலாம்.

**4. மீளப் பயன்படுத்தல் (Reproduction)**

நனவு மனதுக்குக் கொண்டு வந்த விடயங்களைச் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு பரீட்சைகளிலும் வேறு சந்தர்ப்பங்களிலும் பிரயோகித்தல். இதற்கும் பல நுட்பங்கள் காணப்படுகின்றன. அவற்றையே நாம் பரீட்சையை எதிர்கொள்ளும் நுட்பங்கள் எனக் குறிப்பிடுகின்றோம்.

இங்கு குறிப்பிட்ட நான்கு செயன் முறைகளிலும் மறக்காமல் படிப்பதற்கு முதல் இரு அம்சங்களும் மிக முக்கிய அம்சங்கள் என்பதை நாம் தெளிவாகப் புரிந்து செயற்பட்டால் மறதி என்ற பிரச்சினையைப் பெரும் பகுதியாகக் குறைத்து விடலாம்.

---

**08 ஆம் பக்கம் பார்க்க...**

இந்தியா மற்றும் இன்னும் சில நாடுகளில் நரி பற்றிய பிழையான மூட நம்பிக்கைகள் உண்டு. நரி முகத்தில் முழித்தால் நல்ல சகுனம், செய்யப் போகும் காரியம் நல்லபடியாக நடக்கும். நரியுடைய முடி, பல் வீட்டில் இருந்தால் நல்ல விடயங்கள் நடக்கும் என்ற எண்ணங்களும் உண்டு. நரியின் பல், என்பு, முடி, தோல் என்பவற்றை விற்பனை செய்யும் சந்தைகளும் சில நாடுகளில் காணப்படுகின்றன. எனவே, இதற்காகவே நரிகள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டும் வருகின்றன. சீனா, கொரியா நாடுகளில் நாய் போன்று நரிகளும் உணவுக்காக கொல்லப்படுகின்றன.

மற்றையது வாழ்வதற்கான மனித சஞ்சாரமற்ற இடம் இல்லாமையும் ஒரு காரணம்தான். வாழிட இழப்பே இவை குறைந்து போனதற்கான முக்கிய காரணமாக அறியப்படுகிறது. உணவிற்காகவும் தோலுக்காகவும் வளர்ப்புப் பிராணிகளைக் கொன்று சாப்பிடுவதால் கண்ணிவெடி வைத்தும், விஷம் வைத்தும், வாகனங்களில் அடிபட்டும் நரிகள் பல இடங்களில் கொல்லப்படுகின்றன. இக்காரணங்களாலும் நரிகள் அழிந்து வருகின்றன. உண்மையிலே நரி ஓர் அழகான விலங்கு. மேற்கு நாடுகளில் நரியையும் வீட்டில் செல்லப் பிராணியாக வளர்ப்பவர்கள் இருக்கின்றனர்.

நாம் நரி முகத்தில் முழித்தால் அது நமக்கு நல்ல சகுனமாக இருக்குமோ இல்லையோ, நிச்சயமாக அது நரிக்கு கெட்ட சகுனம்தான். பாவம் நரிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவித்துடைத்த பளிங்குத்தரைகள்போன்று பரிசுத்தமாக காட்சி தரும் வீதிகள் ஜப்பானில் இருக்கின்றன. கனவின் வேகம்போன்று அதிதுரித கதியில் பயணிக்கும் புகையிரதங்களில் ஒரு துளி கூட குப்பை இல்லை. தமது சூழலில் ஒரு குப்பையைக் கண்டால், அதை அகற்றும் வரை ஜப்பானியர்களுக்கு இருப்புக் கொள்வதும் இல்லை. ஆச்சரியப்பட வைக்கும் சுத்தம் அங்கிருக்கின்றது. பொது இடங்களில் குப்பை சேருவதை ஜப்பான் மக்கள் முற்றாகவே வெறுக்கின்றார்கள்.



# ஜப்பானுக்கு சென்றிருக்கிறீர்களா?

**வ. முஹம்மது நபீல்**

ஜப்பான் அழகாக இருப்பதற்கு 3 காரணங்கள்தான் அடிப்படையாக இருக்கின்றன:

1. சுத்தமாக இருக்க வேண்டும் என்ற மக்களின் மனோநிலை.
2. அரசாங்கம் சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக எடுக்கும் அனைத்து தீர்மானங்களுக்கும் முழுமையாக கட்டுப்படுதல்.
3. கழிவுகளை அகற்றவும் சூழலை சுத்தமாக வைத்திருக்கவும் புதிய புதிய வழிமுறைகளை கண்டு பிடித்தல்.

"பொருட்களது பாவனை மிக அதிகமாக உள்ள நாடாக ஜப்பான் இருந்தாலும் அது குப்பைகளற்ற சுத்தமான நாடாகவே காணப்படுகின்றது. நான் வசிக்கின்ற 'சகா' நகரத்தின் ஊடாக செல்லும் நீர் ஓடைகள் பல இருந்தாலும் ஒரு நீரோடையில் கூட அசுத்தமாக இல்லாமல் தண்ணீர் மிகத் தெளிவானதாகவே காணப்படுகின்றது. பாதையில் ஒரு டொபி உறையைக் காண்பது கூட மிக கஷ்டமானது. ஜப்பான் வாழ் மக்கள் தமது சுற்றாடல் சம்பந்தமாக மிக பொறுப்புடன் நடப்பது பற்றி எனக்கு உண்மையிலயே ஒரு வியப்பு ஏற்பட்டது."

இது ஜப்பான் பல்கலைக்கழகத்தில் இருந்து அனுராதா ஜயவீர அந்த நாட்டைப் பற்றி பகிர்ந்து கொண்ட அற்புத வரிகளாகும். மறுபக்கம் இலங்கையை பற்றியும் சில வார்த்தைகளை இங்கு இணைத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

- வீதியின் இரு பக்கங்களிலும் பொலித்தீன் குப்பைகள் நிரம்பி வழிகின்றன.
- இலங்கையில் நாளாந்தம் 15 மில்லியன் லன்சீற் தாள்களும் அதை விட அதிகமான சொப்பின் பைகளும் பயன்படுத்தப்படுகின்றன.
- கண்டி பெரஹரா ஊர்வலத்தனின்போது சேரும் குப்பைகளின் அளவு 200 மெற்றிக் தொன்களாகும். அதில் பெரும்பங்கு வகிப்பவை பிளாஸ்டிக் குப்பைகள்தான்.
- இலங்கையில் நாளாந்தம் சேரும் குப்பைகளில் 10-15 வீதமானவை பொலித்தீன் கழிவுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை எவ்வாறு அகற்றுவது என அறியாமல் இலங்கை அரசாங்கம் திணறிக் கொண்டிருக் கின்றது.

- மழை பெய்தால் நீர் தேங்குகின்றது, நாற்றம் எடுக்கின்றது, நோய்கள் பரவுகின்றன.

ஜப்பானுடன் ஒப்பிட்டு நமது தாய்நாட்டை தாழ்த்திப் பார்க்கத் தேவையில்லை. ஆனாலும், சத்தி யமான நிஜத்தையும் வாய்மையான மெய்யையும் நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

நாட்டில் தொடரும் குப்பை அகற்றல் மற்றும் சுற்றாடல் சீர்குலைதல் போன்ற இன்னும் பல காரணங்களுக்காக பொலித்தீன், றெஜிபோம், சொப் பின், லன்சீற் போன்றவை 01.09.2017 முதல் அரசாங் கத்தால் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் 17/1405/704/022 வர்த்தமானி அறி வித்தலின் கீழ் ஜுலை மாதம் 11 ஆம் திகதி அமைச் சரவையினால் எடுக்கப்பட்ட இறுதிக்கட்ட தீர்மா னத்தின்படி இவை தடை செய்யப்பட்டுள்ளன.

**எந்த வகையில், பொலித்தீன் எமக்கு ஆபத்தாக அமைகின்றது?**

இலகுவில் உக்கும் தன்மையற்ற பொலித்தீன் சூழலில் படிப்படியாக சேர்ந்து அதன் இயல்பை அழித்துக் கொண்டிருக்கின்றது. பொலித்தீன் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்போதும் பாவிக்கும்போதும் இலகுவாக இருக்கலாம். ஆனால், அவற்றை பாவித்து முடித்த பின் என்ன செய்வது என சிந்தித்துப் பார்த்தால் அவற்றின் ஆபத்து நமக்கு துல்லியமாக புரியும். அவை வீசப்பட்டாலும் புதைக்கப்பட்டாலும் எரிக்கப்பட் டாலும் நிச்சயம் சூழலுக்கு தீங்கானதாகத்தான் மாறுகின்றன. இதனால் மனித குலத்தின் நாளைய எதிர்காலம் மிகப் பெரும் ஆபத்துக்குள்ளாக் கப்பட்டிருக்கின்றது. பிளாஸ்ட்ரிக் பொருட்கள் ஒரு படையாக படிவதால் வெள்ளநீர் மண்ணில் வடிந்து செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றது.



இதனால் அடிக்கடி வெள்ளம் வரக்கூடிய ஆபத்து ஏற்படுகின்றது.

அத்துடன், இந்த ஆபத்தான பொருட்களால் வயல் நிலங்களின் உயிர்த்தன்மையும் உயிர் வகைகளின் பல்வகைத்தன்மையும் ஆபத்துக் குள்ளாக்கப்படுவதாக சூழலியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். கால்நடைகள் அவற்றை உண்ணும் போது குடல் அடைப்பு ஏற்பட்டு அவை இறக்கும் நிலை தோன்றுகின்றது எனவும் எச்சரிக்கப் படுகின்றது.

சுடும் உணவுப் பொருட்களை பரிமாறவும் பொதி செய்யவும் இவற்றை பயன்படுத்தும்போது இவற்றின் இரசாயனங்கள் கரைந்து உடல் கலங்களின் கட்டுப்பாடற்ற பெருக்கத்திற்கு வழிவகுத்து நாளடைவில் அவை புற்றுநோயாக மாறலாம் எனவும் மருத்துவ ஆய்வுகள் அதிர்ச்சி கரமான உண்மையை வெளிப்படுத்தியுள்ளன.

அத்துடன், பிறப்புக் குறைபாடுகள், நோய் எதிர்ப்புச் சக்தி குறைதல், நாளமில்லா சுரப்பிகளின் சீர்குலைவு, வளர்ச்சி மற்றும் இழையங்களின் மீளுருவாக்கத்தில் தாக்கம் ஏற்படல் என பொலித்தீன் பொருட்களின் ஆபத்து பற்றிய பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.

**பிளாஸ்ட்ரிக், பொலித்தீன் பாவனைகளுக்கான மாற்று வழிகள்:**

1. உணவு எடுத்துச் செல்வதற்கு உணவு பெட்டி களை மாத்திரம் பயன்படுத்தல்.
2. பொருள் கொள்வனவுக்காக கடைவீதிக்கு செல்லும்போது தரமாக பையொன்றைக் கொண்டு சென்று, அதில் பொருட்களைக் கொள்வனவு செய்தல்.
3. ஆன்மிக நிகழ்வுகளிலும் அரசியல் கூட்டங் களிலும் பிளாஸ்ட்ரிக் அலங்கார ஜோடனை களை முற்றாக தவிர்ந்து கொள்தல்.
4. சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத கடதாசி, துணி, இயற்கையிலான பைகளையும் பொதி களையும் பயன்படுத்த முனைதல்.
5. கழிவுகளாக ஒதுக்கப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ட்ரிக் குப்பைகளை உரிய முறையில் அகற்ற ஏற்பாடு செய்தல்.

ஆகவே, இந்த பொலித்தீன் தடையை முழுமை யாக பின்பற்றி இலங்கை தேசத்தின் தொடர்ச்சியான புன்னகைக்கு நாம் வழிவகுப்போமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 21

## முஸ்லிம் சமூக மறுமலர்ச்சியும் சீர்திருத்தப் பணிகளும்

அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்ததெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இலங்கையில் இனங்களுக்கிடையே உருவான சமூக மறுமலர்ச்சிப் பணிகளில் முஸ்லிம் சமூகமும் அடங்குகின்றது. பொதுவாக, சகல சமூகங்களிலும் கல்வி, கலாசார, சமூக, சமய மறுமலர்ச்சி இக்காலப் பிரிவில் ஏற்பட்டது. எனவே, இக்காலப் பிரிவில் முஸ்லிம் சமூக மறுமலர்ச்சியை பின்வரும் தலைப்புகளில் விளக்கலாம்:

1. சமய மறுமலர்ச்சி
2. சமூக கல்வி அபிவிருத்தி
3. அரசியல் எழுச்சி

போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோர பிரதேசங்களை கைப்பற்றியதைத் தொடர்ந்து, அப்பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்களின் சமய வாழ்வுக்கு பெரும் இடையூராக அமைந்தனர். ஆங்கிலேயர் காலம் வரை இந்நிலை தொடர்ந்தது. பௌத்த, இந்து சமூகங்களின் தலைவர்களும் சமயக் குரவர்களும் தமது சமயங்களின் மேம் பாட்டுக்கு உழைக்கும் அளவுக்கு வளர்ச்சி பெற்றிருந்தனர். ஆனால், முஸ்லிம் சமூகத்தில் இந்நிலை காணப்படவில்லை. ஆங்கிலேயர் காலப் பிரிவில் கிடைத்த சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக் கொள்ள முஸ்லிம் சமூகம் தயாராக இருக்கவில்லை. முஸ்லிம் உலமாக்கள் தமது சமூகத்தை மாறி வரும் சமூக சூழலுக்கு ஏற்ப வழிநடத்தும் திராணி அற்றவர்களாகவே இருந்தனர். பழைமை போற்றும் பண்பும் மரபு பேணலில் காணப்பட்ட ஆர்வமும் இருந்தன வேயன்றி சமய எழுச்சியின் தேவையை அவர்கள் உணரவில்லை.

இந்தியாவில் இருந்து அறிமுகமாகி இருந்த நம்பிக்கைகளும் சமய சம்பிரதாயங்களும் இஸ்லாத்தின் தூய்மையைப் பாதித்திருந்தன. பிழையான சிந்தனைகளும் அகீதாவுக்கு முரணான நம்பிக்கைகளும் மார்க்கம் என்ற பெயரில் அறிமுகமாகின. ஒரு முஸ்லிம் தனது கடமைகளைக் கூட சரியாக நிறைவேற்றத் தெரியாத பாமரத்தன்மை நிலவியது. இத்தகைய தொரு சூழ்நிலையில் இருந்து முஸ்லிம் சமூகத்தை மீட்டெடுக்க உழைத்த பெருந்தகையாக அறிஞர் சித்திலெப்பை திகழ்ந்தார்.

இலங்கை முஸ்லிம்களின் சமூக, சமய, மறு மலர்ச்சியின் முதன்மை முன்னோடியாக அறிஞர் சித்திலெப்பை காணப்படுகிறார். அவர் *1838.05.11* இல் கண்டியில் பிறந்தார். சிறந்த இஸ்லாமிய பாரம்பரியக் கல்விப் பின்னணியும் கொண்ட குடும்பத்தில் பிறந்த அவர் *1862* இல் மாவட்ட நீதிமன்ற வக்கீலாகவும் *1864* இல் சுப்ரீம் கோர்ட் வக்கீலாகவும் நியமிக்கப்பட்டார். *1874-1878*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை முனிசிபல் நீதிமன்றத்தில் இடைக்கிடையே நீதிபதியாகவும் கடமையாற்றினார்.

முஸ்லிம்களின் சமய மறுமலர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்கு மகத்தானதாகும். இதற்காக அவர் ஒரு சஞ்சிகையையும் இரு நூல்களையும் எழுதி வெளியிட்டார். ஞானதீபம் என்பது 1892 ஆம் ஆண்டு அவரால் வெளிக்கொணரப்பட்ட ஆன்மிக அம்சங்களை விளக்கும் சஞ்சிகையாகும். ஞானதீபம் சஞ்சிகை மூலம் சித்திலெப்பை பல அரிய தகவல்களை முஸ்லிம் சமூகத்துக்கு வழங்கினார். இஸ்லாத்தின் சிறப்பியல்புகள் அல்குர்ஆனின் சிறப்புக்கள், பெற்றோர் பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகள், கணவன் மனைவி உரிமைகள், கடமைகள், தலைவர்கள், செல்வந்தர்கள் மக்களுக்கு செய்ய வேண்டியவை என்ற தலைப்புகளில் அவை அமைந்திருந்தன.

தொழுகையின் முக்கியத்தும், அதில் பேண வேண்டிய ஒழுக்கங்கள் பற்றியும் அதன் ஆன்மிக முக்கியத்துவம் பற்றியும் ஞானதீபத்தில் விளக்கியுள்ளார். அவ்வாறே நோன்பு, ஸகாத், ஹஜ் என்பவற்றின் முக்கியத்துவம் அவற்றை நிறைவேற்றும்போது பேண வேண்டிய ஒழுக்கங்கள் என்பன பற்றியும் விளக்கியுள்ளார்.

சித்திலெப்வையின் இன்னொரு பிரதான பணியாக நூல்கள் வெளியீடு அமைந்தது. அதில் சமய எழுச்சிக்கு முக்கியம் கொடுத்த நூலாக அவரது 'அஸ்ராருல் ஆலம்' என்பது அமைந்துள்ளது. இக்காலப் பிரிவில் இஸ்லாமிய மெஞ்ஞானத்துறை இஸ்லாமிய ஷரீஆவுக்கு மாற்றமான சிந்தனைகளால் நிரம்பியிருந்தது. இபாதத்களின் முக்கியத்துவம் புறக்கணிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இஸ்லாமிய மெஞ்ஞானத் துறையின் முக்கியத்துவம் பற்றி கேள்வி-பதில் வடிவில் இந்நூலை அவர் எழுதினார். ரூஹ், கல்ப், நப்ஸுல் அம்மாரா, மந்திரம், சூனியம், பிசாசு, ஜின், இறைஞானம், மஃரிபா தவ்ஹீத், தரீகா,வஹி, இல்ஹாம் போன்ற பல அம்சங்கள் பற்றி இந்நூலில் விளக்கியுள்ளார். அவ்வாறே தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ், கனவு, விவாகம் என்பன பற்றியும் இந்நூலில் எழுதப்பட்டுள்ளன.

- ஞானதீபம் என்பது 1892 ஆம் ஆண்டு அவரால் வெளிக்கொணரப்பட்ட ஆன்மிக அம்சங்களை விளக்கும் சஞ்சிகையாகும்.
- சமய எழுச்சிக்கு முக்கியம் கொடுத்த நூலாக அவரது 'அஸ்ராருல் ஆலம்' என்பது அமைந்துள்ளது.
- சித்திலெப்பையின் இன்னொரு நூல் 'சீரூதுஸ் ஸலாத்' என்பதாகும். தொழுகையின் ஆன்மிகப் பயன்பாடுகள் இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன.
- மறுமலர்ச்சிக்கு உழைத்த இன்னொரு பொருந்தகை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஆவார்.

'அஸ்ராருல் ஆலம்' இன்னொரு முக்கிய விடயத்தையும் சுட்டிக் காட்டுகின்றது. ஆங்கில மொழியைக் கற்பது பிழையானது எனக் கருதப்பட்ட அந்த கால சூழ்நிலையில், அதனை உலமாக்களும் சாதாரண மக்களும் கற்க வேண்டும் என அவர் குறிப்பிடுகிறார். மொழி என்பது அறிவின் திறவுகோல் என்ற வகையில், அதனைக் கற்பதன் ஊடாகவே சகல கலைகளையும் கற்க முடியும் என்கிறார். அவ்வாறே, இந்துக்கள், பௌத்தர்கள், ஐரோப்பியர்கள் ஆகியோரது சமயக் கலைகளைக் கற்க வேண்டும், அவற்றைக் கற்பது அவர்களை விளங்க உதவும் என சித்திலெப்பை கருதினார்.


சித்திலெப்பையின் இன்னொரு நூல் 'சுரூதுஸ் ஸலாத்' என்பதாகும். தொழுகையின் ஆன்மிகப் பயன்பாடுகள் இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன. தொழுகை ஒரு முஸ்லிமின் பண்பாட்டில், வாழ்வில் தாக்கம் தரும் ஓர் இபாதத்தாக அமைதல் வேண்டும், அதற்கும் வாழ்க்கைக்கும் தொடர்பு இருக்க வேண்டும், அவ்வாறு இல்லாத தொழுகை பயனற்றது என்கிறார்.

இக்காலப் பிரிவில் முஸ்லிம்களின் சமய மறுமலர்ச்சிக்கு உழைத்த இன்னொரு பொருந்தகை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஆவார். 1884 இல் அவர் வெலிகமையில் ஆரம்பித்து வைத்த அல்மத்ரஸதுல் பாரி இதற்கு உதாரணமாகும். சமய மறுமலர்ச்சிக்கு பல்வேறு வகைகளிலும் அவர் உழைத்தார். தான் சரியெனக் கருதிய அடிப்படைகளில் இருந்து சமய விருத்திக்கு அவர் ஆற்றிய பணிகள் மகத்தானவையாகும்.

இவ்வகையில் நோக்கும்போது, 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் முஸ்லிம் சமூகத்தில் சமயத்துறை சார்ந்த மறுமலர்ச்சி உருவாக்கப்பட்டமையை அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கவிதைச் சரம்

## இதுவா(வே) எங்கள் சுதந்திரம்?

இதுவா(வே) எங்கள் சுதந்திரம்?
பஜ்ர் வேளை எழும்பணும்
பல் துலக்கி முகம் கழுவணும்
காலைக் கடனை முடிக்கணும்
கல்விக்கூடம் செல்லணும்
ளுஹர் வேளை திரும்பணும்
உடை மாற்றிக் கொள்ளணும்
பகல் உணவ உண்ணணும்
டியூஷன் பையைத் தூக்கணும்
திரும்பிடாமல் நடக்கணும்
அஸர் நேரம் மீளணும்
அவசரமாய் டீ குடிக்கணும்
ஜூப்பா தொப்பி அணியணும்
மத்ரஸாவுக்குப் போகணும்
மஃரிப் நேரம் கிளம்பணும்
மேல் கழுவிக் கொள்ளணும்
புத்தகம் கொப்பி எடுக்கணும்
இஷா வரைக்கும் படிக்கணும்
இதுவா(வே) எங்கள் சுதந்திரம்

**ஆர்.எம். அஸ்ரித் முஹம்மத்**
**பொ/அல் அஸ்ஹர் ம.வி.**
**கல்லளை, கதுருவெல**

## தீராத ஏக்கம்

சிவந்து விட்ட கன்னங்கள் மீது
சிதறி விழுகிறது இரு கண்ணீர்த் துளிகள்
சிறுவயது வாழ்வை நினைக்கையில்

கள்ளமில்லா உள்ளங்கள்
கவலைகள் மறக்க வைக்கும் நண்பர்கள்
களித்து மகிழ்ந்த நாட்கள்
கனமற்ற வாழ்வு

நினைவுக்கடலை விட்டு நீங்காத
நிரந்தர நினைவலைகள்
நினைத்துப் பார்க்கிறேன் கவலையோடு

திரும்பிச் செல்ல முடியா
வாழ்க்கைப் பருவத்தை
திரும்பித் திரும்பி பார்க்கிறேன்
தீராத ஏக்கத்துடன்



**பாத்திமா பின்த் முஹம்மத்**
**கல்லொழுவை**


## புரியாமல் நான்...

தாயே!
எனக்காக அத்தனை
தியாகங்களையும் செய்தாய் நீ
ஆனால் என்னிடம் நீ எதையும்
கேட்டதில்லை இருந்தும் - உன்
கண்கள் ஏதோ ஒன்றை
யாசிக்கிறது என்னிடம்
புரியாமல் தவிக்கிறேன்
உன் கண்ணின் பாஷை அறியாமல்



**பாத்திமா அஸ்லம்**
**தி/அந்நஹார் மு.வி.**
**மூதூர் - 03**

## பேசும் கவிதை - இல 29



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 ஒக்டோபர் 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முதலிடம் பெற்ற கவிதை

### பர்மா இரத்தம்

நிலையின்றி நிழலின்றி
தெருவோரமாய்
அநாதயாய் அநாதரவாய்
தத்தளிக்கும் – நீ
பர்மா தேசத்தின்
இரத்தமோ!

✍ எம்.ஏ.எப். அஸீரா
கொ/அல்ஹிக்மா கல்லூரி
கொழும்பு - 12

### விதி

வீதியோரங்களே
விதியாகி
வீணாகிப்போகும்
எங்கள்
எதிர்காலம் பற்றி
சிந்திப்போர்
யாருமுண்டோ

✍ ஸாஜிதா ஹஸீனா
மின்ஹாஜ் மு.ம.வி.
நிககொள்ள

### யுத்தம்

யுத்தம் விட்டுச் சென்ற
சான்றுகளில்
நானும் ஒன்று

✍ எம்.என்.எப். ஸம்ஹா
கம்பளை

### அடைக்கலம் இல்லை

அழுவோனுக்கு அன்பில்லை
அரவணைக்க ஆளில்லை
அன்பாளனே அடைக்கலமாவான்

✍ ரஹீமா பானு
ஹாதியா வளாகம்

## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்

### காருண்யம்

வீடு பூட்டப்பட்டாலும்
தெருவோரம் திறந்திருக்கிறது
மனிதம் மறைந்திட்டாலும்
மகத்துவமிக்க அல்லாஹ்வின்
கருணையால்
மிருகம் துணையிருக்கிறது
சிறுவர் உரிமை காக்க

✍ அஸ்ரித் முஹமட்
பொ/அல்அஸ்ஹர் ம.வி.
கதுறுவெல

### புதிய உலகம் வேண்டும்

பூக்களாய் உள்ளங்கள்
மென்மை கொள்
உலகம் வேண்டும்
மனிதர்களே புனிதமாக
கருதப்பட வேண்டும்
காற்றில் சிரிப்புச்
சத்தங்களும் வேண்டும்

✍ பாத்திமா நிப்ரா
கலயாய. மாஹோ

### பயணம்

உறவுகளின்றி
உறக்கமின்றி
ஊர் ஊராய்
செல்கிறோம்
தொலைந்துபோன
எங்கள் சொந்தங்களையும்
தேசங்களையும் தேடி

✍ பர்ஹானா மன்ஸூர்
மூதூர் 05

### தனிமை

உறவுகளின்றி
உறையுளின்றி
உணவின்றி
தவிக்கின்றேன்
தனியாக
தவமாக...

✍ நிப்லா நிஸாம்
ரிதீகம

### எங்கே வெண்புறா?

அமைதியின் அடையாளம்
வெண்புறா என்றார்கள்
ஆனால் இங்கு
மனிதர்களை எரிக்கிறார்கள்
வெண்புறாக்கள் மீளுமா?
மனிதம் மீண்டும் தழைக்குமா?

✍ ஸல்ஹா பாத்திமா
அல்-ஸபா மு.வி. வத்தேகெதர

### எங்கேயும் நீதி இல்லை

உலகம் மரணித்து விட்டது
உயிர்கள் அழிந்து விட்டன
ஊடகங்களும் நிறுவனங்களும்
உறங்கி விட்டன
எங்கே நீதி?

✍ எம்.ஆர். ஸம்ஹரீரா
அல்ஹிக்மா மு.ம.வி.
குரு/தித்தவல்கால

### அமைதி என்பது

வாரத்தையளில் மட்டும் இருக்கிறது
வாழ்வில் தொலைந்து விட்டிருக்கிறது
கனவில் மட்டும் வருகிறது
நிஜத்தில் நிழலாய் கூட இல்லாமல்

✍ ஸைக்கா பர்வின்
அல்ஹிக்மா கல்லூரி
கொழும்பு - 12

### நடு வீதியில்

சிறுவர் உரிமை காக்க
சபைகளும்
சட்டங்களும்
மாநாடுகளும்
ஆயிரம் ஆயிரம்
முளைத்தாலும்
இன்னும் நடு வீதியில்தான்!

✍ எம்.எப்.எம். பஸாரத்
அலியாவெடுனுவெவ
கல்கமுவ


### களவாடப்பட்ட கனவுகள்

களவாடப்பட்ட
கனவுகளின்
காலடித்தடங்களில்
மூர்ச்சித்துக் கிடக்கிறது
வாழ்க்கை வானமுட்டும்
உயரத்தில் பறக்கிறது
உரிமைக் கோஷங்கள்!

✍ நதா மர்யம்
இக்கிரிகொள்ளாவ மு.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11
தொடர் : 23

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்

## கடவுச் சொற்களை முகாமை செய்தல் (Password Management)

**பாடம் - 18**

நவீன யுகம் இலத்திரனியல் சாதனங்களால் நிறைந்து காணப்படுகின்றது. அதே வேளை, இலத்திரனியல் சாதனங்களில் பயன்படுத்தப்படும் செயலிகளின் **(Apps)** எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் காணப்படுகின்றன. இலத்திரனியல் சாதனங்களையும் செயலிகளையும் பயன்படுத்தும்போது பயநர் **(User)** பல்வேறு கடவுச் சொற்களைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது.

பாதுகாப்பு நோக்கம் கருதியும் உரிமத்தை உறுதி செய்து கொள்வதற்குமாகவே (தன்னுடைய கணக்கு என்பதை உறுதி செய்வதற்கவே) கடவுச் சொற்கள் பயன்படுத்தப்டுகின்றன. எனினும், பல்வேறு இலத்திரனியல் உபகரணங்களிலும் பல்வேறு செயலிகளிலும் பல முறை கடவுச் சொற்களைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படுவதால் இலகு கருதி பயநர்கள் ஒரே கடவுச் சொற்களைப் பயன்படுத்தும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். இவ்வாறு பைல்கள், தொலைபேசி செயலிகள், கணினிச் செயலிகள், நிதிசார்ந்த இலத்திரனியல் பரிமாற்றங்கள் போன்றவற்றிற்கு ஒரே கடவுச் சொற்களைப் பயன்படுத்துவதானது ஆபத்து நிறைந்ததாகும்.

ஒரே கடவுச் சொற்களைப் பயன்படுத்துவது அல்லது எளிதில் ஊகிக்கத்தக்க கடவுச் சொற்களைப் பயன்படுத்துவது தனிப்பட்ட தகவல்கள், பணம் என்பன களவாடப்படுவதற்கு ஏதுவான காரணியாகும். எனவே, கடவுச் சொற்களை அமைப்பதில் கடைப்பிடிக்க வேண்டிய சில அடிப்படை விடயங்களை நோக்குவோம்.

**கடவுச் சொற்களை அமைப்பதில் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள்:**

1. எளிமையான கடவுச் சொற்களைப் பயன்படுத் தாதிருத்தல்.

கடவுச் சொற்களை அமைக்கும்போது மிக எளிமையான சொற்களைப் பயன்படுத்தல் கூடாது. '12345' என்பன மிக எளிமையாக நினைவில் கொள்ள முடியுமான கடவுச் சொற்களாகும். இவை பயனருக்கு இலகுவானது என்பதைப் போன்றே சூழலில் உள்ள அடுத்தவர்களும் இலகுவாகப் பயன்படுத்த முடியுமானவையாகும்.

அதேவேளை, கடவுச் சொற்களை கண்டறிவ தற்காகவன்றி உருவாக்கப்பட்ட செயலிகள் காணப்படுகின்றன. அவற்றுக்கான முக்கிய தகவல்களை வழங்கும்போது அவை கடவுச் சொற்களைத் தேடி மாதிரி கடவுச் சொற்களை வழங்கும். எளிமையான கடவுச் சொற்களைப் பயன்படுத்தியிருப்பின் அவற்றை அது கண்டு பிடித்து விடும்.

எனவே, கடவுச் சொற்கள் ஒரு சொல்லாக இல்லாது அமைதல் வேண்டும். பெரிய மற்றும் சிறிய ஆங்கில எழுத்துக்களை இணைத்தே அவை அமைக்கப்பட வேண்டும். அவற்றின் இடையே இலக்கங்கள், ஆச்சரியக் குறி, டொலர் குறியீடு போன்ற குறியீடுகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

2. குறிப்பான வாழ்க்கை நிகழ்வுகளை பிரதிபலிக் கும் சொற்களைப் பயன்படுத்தாதிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண நாள், பிறந்த நாள், செல்லப் பிராணி யின் பெயர், பாடசாலையின் பெயர், பிள்ளைகளின் பெயர் போன்ற குறிப்பான தகவல்களை கடவுச் சொற்களாகப் பயன்படுத்தும்போது மிகுந்த அவதானம் தேவை. உங்கள் தகவல்களை அறிந்த வர்களும் அல்லது சமூக வலைத்தளங்கள் மூலம் உங்களது தகவல்களை அறிந்திருக்கும் சமூக வலைத்தள நண்பர்களும் அத்தகவல்களை அறிந்து உங்களது இரகசியங்களை களவாட வாய்ப்புள்ளது.

3. ஒரே கடவுச் சொற்களைப் பயன்படுத்தலைத் தவிர்த்தல்

பல மின்னஞ்சல் கணக்குகளைக் கையாலும் போதும், இணையப் பக்கங்களில் பதிவுகளை மேற்கொள்ளும்போதும் ஒரே கடவுச் சொற்களைப் பயன்படுத்துவதிலிருந்து தவிர்ந்து கொள்தல் வேண்டும். சில கடவுச் சொற்களின் முன்பகுதி ஒரே மாதிரியாகவும் பின்பகுதி பயன்படுத்தும் தளத் திற்கு ஏற்பவும் சிலர் அமைத்துக் கொள்கின்றனர். இதுவும் ஆபத்து நிறைந்த முயற்சியாகும்.

4. கடவுச் சொற்களை அவ்வப்போது மாற்றிக் கொள்ளல்

கடவுச் சொற்களை வருடத்திற்கு நான்கு முறையேனும் மாற்றிக் கொள்வது பாதுகாப்பானது. சில நிறுவனங்கள் தங்கள் கடவுச் சொற்களை மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு ஒருமுறை மாற்றிக் கொள்கின்றது. இன்னும் சில நிறுவனங்கள், நெட் வொர்க் இணைப்பில் நுழைகையில், ஒவ்வொரு முறையும் சிஸ்டம் தரும் பாஸ்வேர்டினைப் பயன்படுத்தும் வகையில் இரு வழி கடவுச் சொல் முறையைப் பயன்படுத்துகின்றது. சிரம மாக இருப்பினும், பாதுகாப்பிற்காக கடவுச் சொற் களை அவ்வப்போது மாற்றிக் கொள்வது சிறந்த நடைமுறையாகும்.

நவீன கடவுச் சொற்களை உருவாக்கும் இணையத்தளங்கள்

இணையப் பக்கங்களுக்குள் உள் நுழையும்போது இணையக் கணக்குகளை உருவாக்கிக் கொள்வது பொதுவாக மேற்கொள்ளப்படும் நடைமுறையா கும். அதன்போது ஒவ்வொரு இணைய கணக் குகளுக்கும் கடவுச் சொற்களை (Password) பயன்படுத்த வேண்டும். இலகுவில் நினைவில் நிற்கக்கூடிய, வித்தியாசமான, எளிதில் ஊகிக்க முடியாததுமான கடவுச் சொற்களே பாதுகாப்பா னது. எனவே அவ்வாறான கடவுச் சொற்களை உருவாக்கும் இணையப் பக்கங்கள் காணப்படு கின்றன. அவற்றில் http://www.passwordcard.org/en என்ற இணையப் பக்கம் முக்கியமானது.

இதில் Password card என வழங்கப்படும் கடவுச் சொற்கள் குறிப்பான எண்களையும் பொதுவான எழுத்துக்களையும் விசேட அடையாளங்களையும் கொண்டமைந்திருக்கும்.

ஒவ்வொரு வரிசையும் வெவ்வேறு நிறங்களா லும் குறியீடுகளாலும் அமைக்கப்பட்டது. நிறத் திற்கும் குறியீட்டுக்கும் இடையிலான தொடர்பை நினைவில் வைத்து எழுத்துக்களையும் எண்களை யும் வாசிக்கும்போதும் கடவுச் சொல்லை வாசிக்கும்போது பயன்படுத்தும்போதும் அது இலகுவில் நினைவில் கொள்கின்றது.

அதேவேளை, இந்த இணையப் பக்கம் அமைத்துத் தருகின்ற கடவுச் சொற்களுக்குப் பதிலாக பயநரின் விருப்பின்பேரிலும் எண்களையும் எழுத்துக்களையும் இடுவதற்கான ஒரு சந்தர்ப் பத்தை அது வழங்கியிருக்கின்றது. பயநர் விரும் பின் எண்களை மாத்திரம் கொண்டிருக்கின்ற கடவுச் சொற்களைத் தெரிவு செய்து கொள்ளவும் முடியும்.

எனினும், இவ்வகையான கடவுச் சொற்கள் எல்லா கணக்குகளுக்கும் பொருத்தமற்றதாயிருக் கும். கடவுச் சொல் அட்டையில் காணப்படும் பயநருக்கென உருவாக்கப்பட்ட கடவுச் சொல் லினை பயநர் விரும்பிய பக்கத்திலிருந்து வாசிக் கும் முறையினை தெரிவு செய்து கொள்ள வேண்டும். இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல் மற்றும் இரண்டு மூலை விட்டங்களுக்கிடையிலான பகுதி என்றவாறு அதனது வாசிக்கும் ஒழுங்கை பயநரால் மாற்றித் தீர்மானித்துக் கொள்ள முடியும்.

இவ் இணையப் பக்கத்தைக் கொண்டு உரு வாக்குகின்ற கடவுச் சொல் அட்டையினை பயநர் இந்தப் பக்கத்திலிருந்தே அச்சிட (Print) முடியும். அச்சிட்ட அட்டை காணாமல் போனால் அதே அட்டையை திரும்ப பயநரால் இணையப் பக்கத்திலிருந்து மீளவும் பெற்றுக் கொள்ள முடியும். பயநர் அச்சிட்ட அட்டையை பொதுவான இடங்களில் வைத்திராமல் பயனின் பாதுகாப்பி லேயே வைத்திருத்தல் வேண்டும்.

கடவுச் சொற்கள் எமது உரிமத்தை உறுதிப் படுத்தவும் எமது தகவல்களைப் பாதுகாக்கவுமே பயன்படுத்தப்படுகின்றன. எனவே, அவற்றை காலத்துக்குக் காலம் இற்றைப்படுத்தி நவீன முறைகளில் கடவுச் சொற்களை உருவாக்கிப் பயன்படுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்
வினாப்பத்திரம் I



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

**முதலில் தரப்பட்ட சொற்களுக்குப் பொருத்தமான உருவின் கீழ் கீறிடுக.**

1. மழை, வெயில்

i.  ii.  iii. 

2. வீரம், வேகம்

i.  ii.  iii. 

**வெற்றுக் கட்டத்தினுள் வரவேண்டிய விடையை தெரிவு செய்க.**

3. மின்விசிறி - காற்று எனின், ஒலிபெருக்கி ☐

i. எரிபொருள் ii. சத்தம் iii. வெளிச்சம்

4. வற்றாளை - கிழங்கு எனின், சோளம் ☐

i. தானியம் ii. பயறு iii. கோதுமை




5. பால் - மில்லி லீற்றர் எனின், அரிசி ☐

i. மில்லி கிராம் ii. கிலோ கிராம்
iii. மீற்றர்

6. இரண்டு கிலோ கிராமில் எத்தனை 250 g கள் உள்ளன?

i. 10 ii. 5 iii. 8

7. 1/2 பகுதி நிழற்றப்பட்ட உருவை தெரிவு செய்க.

i.  ii.  iii. 

8. தரப்பட்டுள்ள கூட்டங்களுள் ஒன்று வேறுபடும்; அவ்வாறு வேறுபடுவதை தெரிவு செய்க.

i. விமானம் ii. புகையிரம்
iii. மோட்டார் கார் iv. பேருந்து

9. தென்னை, வாழை, பப்பாசி, அப்பிள்

i. பப்பாசி ii. தென்னை iii. அப்பிள்

**அடுத்து வர வேண்டிய எண்கள் இரண்டையும் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

10. 1097, 1098, 1099, ........, .........

11. 1117, 1118, 1199, ........, .........

12. ஒரு பிள்ளைக்கு 5 இனிப்புக்கள் வீதம் 525 இனிப்புக்களை எத்தனைப் பிள்ளைக்குக் கொடுக்க முடியும்?

**சரியான கோவையை தெரிந்து கோடிடுக.**

13. i. 10+8+7 =26 ii. 12+8+10 = 30
iii. 15-5-3 = 5

14. i. 10+10-20 = 10 ii. 15+10-25 = 50
iii. 30+10-20 = 20

15. நேற்று சனிக்கிழமை எனின், நாளை மறுநாள் என்ன கிழமை?

i. ஞாயிறு ii. திங்கள்
iii. செவ்வாய்

16. 10 ☐ 5 = 50 கட்டத்திற்கு வர வேண்டிய கணித செய்கை குறியீடு யாது?

i. கூட்டல் ii. பெருக்கல்
iii. கழித்தல்

17. மூன்று எண்களைக் கூட்டும்போது 90 வரக்கூடிய எண் தொகுதி?

i. 40+15+45 ii. 30+30+20
iii. 50+35+5

18. ஒரு குதிரைக்கு நான்கு கால்கள் எனின், 10 குதிரை குட்டிக்கும் 10 குதிரைக்குமாக எத்தனை கால்கள்?

i. 40 ii. 20 iii. 80

19. 5 ஆலும் 10 ஆலும் மீதியின்றி வகுபடும் எண் யாது?

i. 15 ii. 20 iii. 25

20. கடலுக்கு கப்பல்போல ஆற்றுக்கு?.............

i. கப்பல் ii. மீன் iii. தோணி

| | |
|---|---|
| 6 | 4 |
| 0 | 9 |

வட்டத்தில் உள்ள எண்களைப் பயன்படுத்தி,

21. மிகப் பெரிய எண்ணை எழுதுக.

22. மிகச் சிறிய எண்ணை எழுதுக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் எண்களை விரித்து எழுதுக.

23. 5328 = ......+......+......+......

24. 9647= ......+......+......+......

எண்சட்டங்களில் வகைக்குறிக்கப்படும் எண்களை கூட்டுக.

25. 

= ........

26. ◯ + ◯ = 14 எனவும் □ - 3 = ◯ எனவும் தரப்பட்டுள்ளன.

□ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

i. 15 ii. 10 iii. 12

27. ◯ + □ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

i. 15 ii. 16 iii. 17

28. கமலாவுக்கு இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர். கமலாவின் பெற்றோருக்கு எத்தனை பிள்ளைகள் உள்ளனர்?

i. 5 ii. 4 iii. 6

**பூக்கள் உள்ள தோட்டம்**
**வண்டுகள் எல்லாம் ஆட்டம்**
**சுற்றுச் சூழல் வாசம்**
**நாமும் அங்கே நாட்டம்**

29. பூக்கள் உள்ள தோட்டத்தை எவ்வாறு அழைப்பர்?

i. பூஞ்சோலை ii. கானகம்

iii. பூச்செண்டு

30. வண்டுகளின் ஒலி மரபு எது?

i. ரீங்காரமிடும் ii. இரையும்

iii. அலப்பும்

31. பாடலில் இடம்பெற்ற உயர்திணை பன்மைச் சொல் எது?

i. பூக்கள் ii. நாட்டம்

iii. நாமும்

32. சுற்றுச் சூழல் என்பதனால் கருதப்படுவது யாது?

i. அக்கம் பக்கம்

ii. மிக நீண்ட பிரதேசம்

iii. காடு

33. ஒரே ஓசை உடைய சொற்கூட்டம் யாது?

i. பூக்கள், வண்டுகள்

ii. அங்கே, உள்ள

iii. ஆட்டம், நாட்டம்

34. பின்வரும் சொற்களை 'த' வரிசையில் ஒழுங்குபடுத்துக.

தொட்டில், திங்கள், தோசை, தருமம்

..................................................................

மிகப் பொருத்தமான அடைமொழிச் சொற்களை எழுதுக.

கொடிய, நீல, மெதுவாக, வேகமாக, ஆழ்

35. ............ நகர்ந்தது

36. ............ கடல்

37. ............ மிருகம்

38. ............ ஓடியது

39. ............ வானம்

வித்தியாசமான சொல்லுக்கு கோடிடுக.

40. விழி, கண், மண், நேத்திரம்

41. பாண், ஆகாரம், இறை, சாப்பாடு

42. சினைப்பெயர் கொண்ட தொகுதி எது?

i. வட்டம், சதுரம், முக்கோணம்

ii. தலை, கால், நகம்

iii. கோபம், மகிழ்ச்சி, அழுகை

43. உயர்திணை பன்மை, வினைச்சொல் கொண்ட தொகுதி எது?

i. மாணவன், தம்பி, சிற்றப்பா

ii. வந்தது, போனது, தூங்கியது

iii. வந்தார்கள், இருந்தார்கள், படித்தார்கள்

அடுத்து வரும் சொல்லை எழுதுக.

44. காகம், கிளி, கீரை, குருடி, ............

45. சுருட்டு, சூது, செதில், சேவல், ..........

46. ........., வாகனம், விளையாட்டு, வீரம்

கட்டத்தினுள் உள்ள எழுத்துக்களை வைத்து வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| | ம | | பா | |
| | கா | வா | | |
| ல் | வ | லி | | ழை |

47. ஏழைகளின் அப்பிள் ...........

48. இலங்கையின் பெரிய கங்கை ............

49. பூரண உணவுகளில் ஒன்று ............

(44 ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்
வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

**பாடலை பூர்த்தி செய்க.**

1. காகம் .......... பார்
   காலையும் ஆனது பார்
2. .......... கூவுது பார்
3. ............ பாடுது பார்

**பிறகு நிமிந்து சிரிக்கிறது**

4. பின்னாற் ............ பார்க்கிறது
5. ............ காற்றில் உதைக்கிறது
6. சின்னக் .......... பறக்கிறது

**மிகப் பொருத்தமான விடை தருக.**

7. படம் வரைபவன் .............
8. சிலை செதுக்குபவன் .............
9. மட்பாண்டம் செய்பவன் .............
10. விமானம் செலுத்துபவன் ...........

**நிறுத்தற் குறிகளை இடுக.**

11. காற்புள்ளி :..................
12. மேற்கோள்குறி :..................
13. வினாக்குறி :..................
14. ஆச்சரியக்குறி :..................

**எழுவாய்க்குக் கோடிடுக.**

15. பந்து உருண்டு ஓடியது.
16. ஆகாயத்தில் பட்டம் பறந்தது.
17. ஆசிரியர் மாணவரை பாராட்டினார்

**ஒத்தகருத்து தருக.**


18. துயில் .......................
19. தபால்தலை ...................
20. மடல் ....................
21. நோய்களில் இருந்து உடலைப் பாதுகாக்கும் போசனைக் கூறு எது?
    i. புரதம் ii. மாப்பொருள்
    iii. விற்றமின்
22. மஞ்சள் நிற காய்கறிகள், பூக்களில் காணப்படும் போசனைக் கூறு எது?
    i. விற்றமின் B ii. விற்றமின் C
    iii. விற்றமின் A
23. புளிப்புச் சுவை கொண்ட பழங்களில் காணப்படும் போசனைக் கூறு எது?
    i. விற்றமின் A ii. விற்றமின் B
    iii. விற்றமின் C
24. பச்சையாக உண்ணக் கூடிய உணவுகள் எவை?
    i. கரட், தக்காளி ii. வல்லாரை, போஞ்சி
    iii. சலாது, பீட்றூட்
25. நாம் கண்டிப்பாக உண்ண வேண்டிய உணவு வேளை எது?
    i. இரவு உணவு ii. காலை உணவு
    iii. மாலை உணவு
26. அசுத்த நீரினால் ஏற்படக் கூடிய நோய் யாது?
    i. டெங்கு ii. நெருப்புக் காய்ச்சல்
    iii. இருமல்
27. தேசிய கீதம் இசைக்கப்படும் சந்தர்ப்பம் எது?
    i. சுதந்திர தினம்
    ii. பெருநாள் விளையாட்டுப் போட்டி
    iii. திருமண விழா
28. புத்தளம் மவட்டம் அமைந்துள்ள மாகாணம் எது?
    i. வடமத்திய மாகாணம்
    ii. மேல் மாகாணம்
    iii. வடமேல் மாகாணம்
29. இலங்கை அரச இலட்சினையில் நெற்கதிர்களை உணர்த்தும் அடையாளம் எது?
    i. தர்மம் ii. தன்னிறைவு
    iii. சௌபாக்கியம்
30. அரச இலட்சினை பொறிக்கப்பட்டுள்ள இடம் எது?
    i. முத்திரை ii. நாணயங்கள்
    iii. காசுத்தாள்கள்

**எண் கோலத்தில் வெற்றிடத்திற்கு வர வேண்டிய எண்களை எழுதுக.**

31. [5] [5] → [25]   [3] [7] → [21]   [1] [....] → [1]
    i. 2 ii. 3 iii. 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. 


i. 8
ii. 9
iii. 10

33. இவ்வுருவில் உள்ள முக்கோணியின் அதிகூடிய எண்ணிக்கை யாது?



i. 4
ii. 5
iii. 8

34. 'நூற்று இருபத்து ஐந்து' என்னும் எண்ணில் உள்ள இலக்கங்களை பின்னால் இருந்து எழுதும்போது கிடைக்கும் எண் யாது?

35. என்னிடம் ரூபா 30.00 பணம் உள்ளது. தம்பியிடம் என்னை விட ரூபா 10 பணம் அதிகமாக உள்ளது எனின், இருவரிடம் இருந்த பணம் எவ்வளவு?

36. பெருக்கும்போதும் கூட்டும்போதும் ஒரே விடையைத் தரக்கூடிய இரண்டு இலக்கங்கள்?

i. 3, 4 ii. 5, 5 iii. 2, 2

37. என்னிடம் இருந்த ரூபா 200 இல் 1/4 பகுதியை தம்பிக்கு கொடுத்தால் என்னிடம் இருக்கும் பணம் யாது?

i. ரூபா 100.00 ii. ரூபா 50.00
iii. ரூபா 150.00

38. உணவை உறிஞ்சுக் குடிக்கும் பிராணி எது?

i. குரங்கு ii. தேனீ iii. கிளி

39. மரப் பொந்தினுள் வாழும் பிராணி எது?

i. காகம் ii. பருந்து iii. மைனா

40. கூர்மையான கேட்டல், பார்வைத் திறன் கொண்ட பிராணி எது?

i. யானை ii. காகம் iii. மான்

41. விசர்க்கடி நோய் எந்தப் பிராணியால் ஏற்படுகிறது?

i. நுளம்பு ii. நாய் iii. மாடு

42. வயல்களை உழுவதற்கு பயன்படுத்தும் உபகரணம் எது?

i. அரிவாள் ii. கலப்பை
iii. மண்வெட்டி

43. எப்பொருளை ஒருவர் தனியாக பயன் படுத்துவர்?

i. குதிரை ii. மேசை iii. சீப்பு

44. கொத்தன் பயன்படுத்தும் உபகரணம்?

i. நீர்மட்டம் ii. சுத்தியல்
iii. சீவுளி

45. மின்சார வேலை செய்வோர் பயன்படுத்தும் உபகரணங்கள் எவை?

i. சீவுளி, மின் சோதிப்பான்
ii. கையுறை, இடுப்புப்பட்டி
iii. குரடு, சுத்தியல்

46. கொல்லன் பயன்படுத்தும் உபகரணம் யாது?

i. துருத்தி ii. கத்தரி
iii. துறப்பணம்

47. சட்டி, பானை செய்வோர் பயன்படுத்தும் உபகரணம் யாது?

i. மூலைமட்டம் ii. வனைச்சில்லு
iii. மியாசு

48. பின்வரும் பூக்களில் நறுமணம் வீசும் பூ எது?

i. கடதாசிப்பூ ii. மல்லிகை
iii. சூரிய காந்தி

49. இதழ்கள் கூடிய பூ எது?

i. தாமரை ii. செவ்வரத்தை
iii. மல்லிகை

50. ஆண்டு முழுவதும் காய்க்கும் தாவரம் எது?

i. மா ii. தென்னை
iii. மரமுந்திரி

51. இரவில் மலரும் பூக்கள் எந்நிறமானது?

i. மஞ்சள் ii. வெள்ளை
iii. சிவப்பு

52. தாவரங்களில் இரவைக் கழிக்கும் பிராணி எது?

i. குரங்கு ii. தூக்கணங்குருவி
iii. அணில்

53. கூட்டாக நடமாடும் பிராணி எது?

i. யானை ii. பூனை
iii. நாய்

54. குஞ்சு, குட்டி, கன்றுகளுடன் நடமாடும் பிராணி எது?

i. கிளி ii. வாத்து
iii. குரங்கு

55. ஆறு கால்கள் கொண்ட பிராணி எது?

i. சிலந்தி ii. குளவி
iii. நண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. உணவை கொறித்து உண்ணும் பிராணி எது?

i. காகம் ii. புறா

iii. கிளி

57. உணவை அரைக்காமல் உண்ணும் பிராணி எது?

i. ஓணான் ii. முயல்

iii. நாய்

58. ஒரு தடவையில் ஒரு குட்டியை மாத்திரம் ஈனும் பிராணி எது?

i. ஒட்டகம் ii. பூனை

iii. முயல்

**'எனது பாசமான தங்கை' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.**

**விடைகள்**

1. கரையுது
2. சேவல்
3. சின்னக்குயில்
4. திரும்பிப்
5. சிறகைக்
6. குருவி
7. ஓவியன்
8. சிற்பி
9. குயவன்
10. விமானி
11. ,
12. ''
13. ?
14. !
15. பந்து
16. ஆகாயம்
17. ஆசிரியர்
18. தூக்கம்
19. முத்திரை
20. கடிதம்
21. விற்றமின்
22. i
23. iii
24. i
25. ii
26. ii
27. i
28. iii
29. ii
30. ii
31. iii
32. i
33. iii
34. 521
35. ரூபா. 70.00
36. iii
37. iii
38. ii
39. iii
40. iii
41. ii
42. ii
43. iii
44. i
45. ii
46. i
47. ii
48. ii
49. i
50. ii
51. ii
52. i
53. i
54. iii
55. i
56. iii
57. iii
58. i

---

**(41 ஆம் பக்கத் தொடர்...)**

**விடைகள்**

1. ii
2. iii
3. ii
4. i
5. ii
6. iii
7. i
8. ii
9. ii
10. 1100, 1101
11. 1200, 1201
12. 105
13. ii
14. iii
15. ii
16. ii
17. iii
18. iii
19. ii
20. iii
21. 9640
22. 0469
23. 5000+300+20+8
24. 9000+600+40+7
25. 3203
26. ii
27. iii
28. i
29. i
30. ii
31. iii
32. i
33. iii
34. தருமம், திங்கள், தொட்டில், தோசை
35. வேகமாக
36. ஆழ்
37. கொடிய
38. மெதுவாக
39. நீல
40. மண்
41. பாண்
42. ii
43. iii
44. கூலி
45. சைக்கிள்
46. வர்ணம்
47. வாழை
48. மகாவலி
49. பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரம் வளர்ப்போம் மனிதம் காப்போம்

உலக சனத்தொகை 7 பில்லியன்களை தாண்டி அசுரவேகத்தில் அதிகரிக்கின்றது. மனித தேவைகள் இரட்டிப்பாகிக் கொண்டிருக்கிறன. விளைவு 'புவியின் இதயம்' என வர்ணிக்கப்படும் மரங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இயற்கையின் ஈரத்தை உறிஞ்சிக்குடித்து இயந்திர யுகம் எல்லை யின்றி வியாபதித்துக் கொண்டிருக்கின்றது.

உலகளாவிய ரீதியில் இன்று காடழிப்பு வீதம் வருடத்திற்கு 1 மில்லியன் ஹெக்டயர்களாகும். இது மொத்த உலக நிலப்பரப்பில் 31 சதவீதத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. இதன்படி, 2050 ஆம் ஆண்டளவில் இந்தியாவின் மொத்த நிலப் பரப்புக்கு சமனான காடுகள் (சுமார் 36 மில்லியன் ஹெக்டயர் காட்டு நிலப் பரப்புக்கள்) வருடாந்தம் இழக்கப்படலாம் என்ற அச்சம் காணப்படுகின்றது. எமது நாட்டிலும் இலங்கையில் மொத்த நிலப் பரப்பில் 84 சதவீதம் (1850 களில்) ஆரம்பத்தில் காடுகளால் மூடப்பட்டிருந்தது. இது 1991 ஆம் ஆண்டாகும்போது 20 சதவீதமே எஞ்சியிருக்கின்றது.

அச்சத்திற்கும் அபாய அறிகுறிக்கும் அடையாள மாகியுள்ள இந்த துரோகமான குற்றத்தை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டியது நமது கடமையாகும்.

**வைரமுத்தவின் கவிதையில் மரம்**

உண்ண கனி,
ஒதுங்க நிழல்,
உடலுக்கு மருந்து,
உணர்வுக்கு விருந்து,
அடைய குடில்,
அடைக்க கதவு,
அழகு வேலி,
ஆட தூலி,
தடவ தைலம்,
தாளிக்க எண்ணை,
எழுத காகிதம்,
எரிக்க விறகு.

2013 ஆம் ஆண்டு **Delhi Greens** என்ற அரச சார்பற்ற நிறுவனம் வெளியிட்ட ஆய்வின்படி, ஒட்சிசனை உற்பத்தி செய்யும் சராசரி மரமொன்றின் பொருளாதார ரீதியான பெறுமதி ஆண்டுக்கு 23.72 இலட்சம் (இந்திய ரூபா) பெறுமதியுள்ளது.

அவ்வாறென்றால்,

- சராசரி மனிதர் ஒருவர் ஒரு நிமிடத்திற்கு 7-8 லீற்றர் காற்றை சுவாசிக்கிறார்.அவருக்கு நாள் ஒன்றிற்கு 11 000 லீற்றர் தேவையாகிறது.
- சராசரியாக ஒரு மனிதனுக்கு தினமும் 550 லிற்றர் ஒட்சிசன் தேவைப்படுகிறது என வைத்துக் கொண்டால் தற்போதைய சந்தைப் பெறுமானத் தின்படி, 2.75 லிற்றர் ஒட்சிசன் சிலிண்டரின் விலை 6,500 ரூபாவாகும்.
- ஒரு நாளைக்கு மனிதனுக்கு ரூ 13 இலட்சம் பெறுமதியான ஒட்சிசன் தேவையாகிறது.

கனடா நாட்டின் தேசிய சுற்றுச்சூழல் அமைப்பு, சராசரியாக ஒரு மரம் ஒவ்வொரு ஆண்டும் 260 பவுண் பெறுமதியான ஒட்சிசனை உற்பத்தி செய்கிறது என்று கூறுகிறது. "இரண்டு முதிர்ந்த மரங்கள் நான்கு குடும்பங்களுக்கு போதுமான ஒட்சிசனை வழங்க முடியும்" என அந்த அறிக்கை தொடர்கிறது.

மறுமை மறுகணம் ஏற்படும் என்ற நிலை காணப் பட்டாலும் கையிலிருக்கும் பேரீத்தம் செடியை நட்டிவிடு என நபிகளார் உபதேசித்தார்கள். கொடூர யுத்தகளத்தில் கூட பயன்தரும் மரங்களை அழிக்கக் கூடாது என அண்ணலார் அன்புரை பகர்ந்துள்ளார்கள்.

எமது வீடு, பாடசாலை, பள்ளிவாசல், பொது நிறுவனங்கள் போன்ற இடங்களுக்கு ஒரு மரத்தை யேனும் உலகிற்கு உயிர்மூச்சு வழங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலையம்

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

(வேறு கிளைகள் எதுவும் கிடையாது...)

**ஒரே கூரையின் கீழ்**
**தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு மொழிகளில்...**

- புனித அல்குர்ஆன் பிரதிகள்
- அகராதிகள்
- உளவியல் நூல்கள்
- தர்ஜுமாக்கள்
- கதைப்புத்தகங்கள்
- சமையல் புத்தகங்கள்
- இஸ்லாமிய நூல்கள்
- அல் ஹதீஸ் தொகுப்புக்கள்
- வரலாற்று நூல்கள்
- இலக்கியத் தொகுப்புக்கள்
- இலக்கண நூல்கள்
- கவிதைத் தொகுப்புக்கள்
- பாடசாலை துணை நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- VCD/DVD

தரமான நூல்களை தயக்கமின்றி பெற்றுக்கொள்ள முடியுமான ஒரே இடம்


அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்...



Accepted:
MasterCard VISA AMERICAN EXPRESS

புதிய நூல்களின் தகவல்கள் அறிய
f<space>ibhbooks என Type செய்து
40404 க்கு அனுப்புங்கள்.

IBH இன் இலவச விநியோகம்
தற்போது உங்கள் வீடுகளுக்கே...
(நகர எல்லைக்குள் மாத்திரம்)



**தினமும் காலை 8:00 மணியிலிருந்து இரவு 10:00 மணி வரை உங்களுக்காக திறந்திருக்கும்**

IBH
## ISLAMIC BOOK HOUSE
77, Dematagoda Road | Maradana | Colombo - 09
Web: www.ibh.lk | Phone: 0115 925733

வெளியீடு மொத்த விற்பனை பகுதி : 0115 736098, 0772518641
தபால் மூலம் நூல்களைப் பெற : 011 2684851
புனித அல்குர் பிரதிகளை மொத்தமாக பெற : 0773171725

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org